# திருமறை ஆசான்

## புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 14 ஜூலை - 2001 இதழ் - 7



வெளியிடுவோர்

**கிறிஸ்துவின் சபையார்,**

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.
தமிழ்நாடு, இந்தியா

✆ 04257 - 20030 e-mail : kangayamcofc@eth.net

## அருமையான வாய்ப்பு

பரிசுத்த ஆவியானவரின் பணி (170 பக்கங்கள்) மற்றும் புதிய ஏற்பாட்டு ஆராதனை (112 பக்கங்கள்) ஆகிய நூல்கள், தரம் நிறைந்த தாளில் அழகாக அச்சிடப்பட்டு, மிக நேர்த்தியான முறையில் பைண்டிங் செய்யப்பட்டு, உங்களுடைய உபயோகத்திற்கு ஆயத்தமாக உள்ளது.

பிரசங்கிகளுக்கும், வேத ஆசிரியர்களுக்கும், வேத மாணவர்-களுக்கும், சபை அங்கத்தினர்களுக்கும் மிகவும் பயனுள்ள ஒன்று.

புத்தகம் முற்றிலும் இலவசம். ஆனால், தபால் செலவு உங்களைச் சார்ந்தது. அனுப்பப்படும் தொகை அளவுக்கு புத்தகங்கள் அனுப்பப்படும். அனுப்ப வேண்டிய குறைந்த பட்ச தொகை ரூ.20/-.

தொடர்பு முகவரி

**தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்**
தபால் பெட்டி எண் 27,
காங்கயம் - 638 701. இந்தியா.

குறிப்பு: M.O. கூப்பனில் உங்கள் முகவரியைத் தெளிவாக எழுதவும்.

## ஆசானின் அறிவுரையிலே...


| | | |
|---|---|---|
| 1. | ஆசிரியர் உரை | 1 |
| 2. | குழந்தை ஞானஸ்நானம் | 9 |
| 3. | பெண்கள் பகுதி | 12 |
| 4. | வாலிபர் பகுதி | 15 |
| 5. | நெகேமியா ஒரு கண்ணோட்டம் | 18 |
| 6. | சிறுவர் பகுதி | 19 |
| 7. | வெளிப்படுத்தின விசேஷம் | 22 |
| 8. | அவளின் (சபையின்) பிரசங்கங்கள் | 28 |

# THIRUMARAI AASAAN

**Published by Church of Christ**

Editor **S. RAJANAYAGAM** Honorary Editor **J.C. CHOATE**

Dharapuram Road, Kangayam - 638 701, Tamil Nadu, India

**Pleading for the restoration of pure New Testament Christianity**

Vol.14 July 2001 Issue-7

**ஆசிரியர் உரை**

# "....நினைத்துக் கொள்ளுங்கள்"

**எ**ப்பொழுதுமே, சொல்லுகிறவர் யார் என்பதைப் பொறுத்து, சொல்லப்படுகின்ற காரியத்திற்கு, முக்கியத்துவம் கொடுக்கப்படும் அல்லது மரியாதை தரப்படும். இப்படிப்பட்ட நேரங்களில் சொல்லப்படும் சந்தர்ப்பமும் கணக்கிலெடுத்துக் கொள்ளப்படுவதுண்டு. இன்னும் சில சமயங்களில், யாருக்கு சொல்லப்படுகிறதென்பதும் கவனிக்க வேண்டிய ஒன்றாக இருக்கும். நான் சொல்லும் இக்கருத்தை எல்லோருமே ஓரளவு ஒத்துக்கொள்வீர்கள் என்று நம்புகிறேன். அப்படியானால், "**நினைத்துக் கொள்ளுங்கள்**" என்று யார் சொன்னது, எப்பொழுது சொல்லப்பட்டது, யாருக்குச் சொல்லப்பட்டதென்று அறிந்து கொள்ள ஆசைப்படுகிறீர்கள், அப்படித்தானே.

உலக மீட்பராகிய நம்முடைய இரட்சகர் இயேசுக்கிறிஸ்து, நன்மை செய்கிறவராய்ச் சுற்றித் திரிந்து இப்பூமியில் ஊழியம் செய்தார். அப்படி ஒரு சமயம் அவர், கலிலேயே, சமாரியாவின் ஓரங்களில் உபதேசித்த போது, "**நினைத்துக் கொள்ளுங்கள்**" என்று சொல்லியிருக்கிறார். வெறுமனே நினைத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லாமல், "**லோத்தின் மனைவியை நினைத்துக் கொள்ளுங்கள்**" என்று கூறியுள்ளார் (லூக் 17:32). அவர், அவ்விடத்திலிருந்தபோது, தேவனுடைய ராஜ்யம் எப்பொழுது வருமென்ற ஒரு கேள்வியை பரிசேயர் அவரிடம் எழுப்பினார்கள் (லூக் 17;20). அதற்கு, "இதோ தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள்ளே இருக்கிறதே" என்று அவர்களுக்குப் பதிலளித்து விட்டு, அப்படியே தன்னுடைய சீடர்களை நோக்கி, இரண்டாம் வருகையைக் குறித்துப் பேசத் தொடங்கினார்.

அப்பொழுது, மனுஷகுமாரன் வெளிப்படும் நாளில் என்ன நடக்கும், எப்படி நடக்கும் என்பதை எடுத்துரைப்பதற்கு ஆதாரமாக, பழைய ஏற்பாட்டில்

இரண்டு சம்பவங்களை கோடிட்டுக் காட்டுகிறார். ஒன்று, "நோவாவின் நாட்களில் நடந்தது போல மனுஷ குமாரனுடைய நாட்களிலும் நடக்கும் என்பது"(17:26). இரண்டு, "லோத்தினுடைய நாட்களில் நடந்ததுபோலவும் நடக்கும் என்பது" (17:28). இந்த இரண்டு சம்பவங்கள் பற்றியும் குறிப்பிட்ட இயேசுவானவர், வேதாகம சரித்திரத்தில் பிரபலமாயுள்ள, ஜலப்பிரளயத்தால் மாண்டு போன நோவா காலத்து ஜனங்களை நினைத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லாமல் அல்லது லோத்துவின் நாட்களில் அழிக்கப்பட்ட சோதோம், கொமோரா பட்டணத்து மனிதர்களை நினைத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லாமல், "லோத்தின் மனைவியை நினைத்துக் கொள்ளுங்கள்" என்றே சொல்லியுள்ளார்.

நினை, நினைவு கூருங்கள், நினைத்துக் கொள்ளுங்கள் என்று வேதாகமம் வேறு பல இடங்களிலும் கூறியுள்ளது. "வாலிபப் பிராயத்தில் உன் சிருஷ்டிகரை நினை" (பிர. 12:1) என்று பிரசங்கி கூறுகிறான். "அவர் செய்த அதிசயங்களையும், அவருடைய அற்புதங்களையும், அவர் வாக்கின் நியாயத் தீர்ப்புகளையும் நினைவுகூருங்கள்" என்று (I நாளா. 16:13) நாளாகமத்தில் காண்கிறோம். "வேத வசனத்தை உங்களுக்குப் போதித்து உங்களை நடத்தினவர்களை நினைத்துக் கொள்ளுங்கள்" (எபி.13:7) என்று எபிரேய ஆசிரியர் சொல்லியுள்ளார்.

ஆனால், மேற்சொல்லப்பட்ட வசனங்கள் சொல்லப்பட்ட அல்லது எழுதப்பட்ட சந்தர்ப்பத்திற்கும், இங்கே நமதாண்டவர், **"லோத்தின் மனைவியை நினைத்துக் கொள்ளுங்கள்"** என்று சொன்ன சந்தர்ப்பத்திற்கும் பெருத்த வேறுபாடு உண்டு. அவர்கள் அந்த வசனங்கள் மூலமாகச் சொல்ல விரும்பிய கருத்திற்கும், நமதாண்டவர் இவ்வார்த்தைகள் மூலமாகப் பதிய வைக்க விரும்பிய பாடத்திற்கும் வித்தியாசம் உண்டு. ஆம், நமதாண்டவர் இவ்வார்த்தைகளை, கிறிஸ்தவ வாழ்க்கையின் முடிவான பலனைத்தரும். இரண்டாம் வருகையைக் குறித்துப் பேசும்போது, "லோத்தின் மனைவியை நினைத்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லியுள்ளார். அதுவும் யாரிடம்? தன்னால் மிகவும் நேசிக்கப்பட்ட, தனக்கு அதிக நெருக்கமான சீடர்களிடம். இங்கே, நாம் கவனித்தால், இவ்வார்த்தைகளைச் சொன்னவர், சொல்லப்பட்ட சந்தர்ப்பம், சொல்லப்பட்டவர்கள் என்று எல்லாமே முக்கியத்துவம் பெறுகிறதாக உள்ளது. ஆகவே, என்ன நோக்கத்தோடு, நமதாண்டவர் இவ்வார்த்தைகளைச் சொல்லியிருக்கலாம் என்பதை நாம் கவனிப்பது பிரயோஜனமாக இருக்கும்.

இரண்டாம் வருகைக்காகத் தன்னுடைய சீடர்களை ஆயத்தப்படும்படி எச்சரிப்பதற்குப் பழைய ஏற்பாட்டில் பல சம்பவங்களும், மிகப் பொருத்தமான நபர்களும் உண்டு. ஆயினும், அவர் "லோத்தின் மனைவியை நினைத்துக் கொள்ளுங்கள்" என்று தமது சீடர்களுக்குச் சொல்லியுள்ளபடியால், அதற்கு ஒரு சிறப்பான காரணம் இருக்கவே வேண்டும். தன்னுடைய சீடர்களாக விரல் விட்டு எண்ணக்கூடிய அளவிலிருப்பவர்களுக்கு மாத்திரமல்ல, பின்னாளில்

தனது சீடர்களாக மாறும் எண்ணிலடங்காதவர்களுக்கும், லோத்தின் மனைவி சம்பவம் முன்னுதாரணமாக இருக்க வேண்டுமென அவர் விரும்பியிருக்க வேண்டும். இன்னும் சீடர்களின் ஆன்மீக வாழ்வுக்கும், லோத்துவுடைய மனைவியின் நிலைக்கும், ஒரு சம்பந்தம் உண்டென்பதை அவர் தனது ஞானத்தால் தெரிந்திருக்க வேண்டும். ஆகையால், "லோத்தின் மனைவியை நினைத்துக் கொள்வது", அன்று அவருடைய சீடர்களுக்கு நன்மை பயப்பதாக இருந்திருக்குமானால், அவருடைய சீடர்களாக இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் நமக்கும் அது நன்மை கொடுப்பதாக இருக்க வேண்டும்.

என்ன நன்மை என்று பார்ப்பதற்கு முன்பாக, லோத்தின் மனைவி பற்றிய பின்னணி கொஞ்சம் தெரிந்து கொள்வோம்.

விசுவாசிகளின் தகப்பனாகிய ஆபிரகாம், தன் தேசத்தையும், தன் ஜனத்தையும், தன் தகப்பன் வீட்டையும் விட்டு, தேவ அழைப்பிற்கிணங்க வந்தபோது, தன் சகோதரனுடைய குமாரனாகிய லோத்-ஐயும் கூட அழைத்து வந்தார் (ஆதி. 12:15). ஒரு கட்டத்தில் இரண்டு பேருடைய வேலைக்காரருக்கும் வாக்குவாதம் வந்தபோது (13:8); இருவரும் சகோதர அன்பு கெடாமல் பிரிந்து செல்ல முடிவெடுத்தனர் (13:9,10). அப்பொழுது, ஆபிரகாமின் பெருந்தன்மையை தனக்கு சாதகமாக்கிக் கொண்டு, பசுமை நிறைந்த சோதோம், கொமோரா பட்டணங்களைத் தெரிந்து கொண்டு போனான் லோத். ஆனால், தான் விரும்பி எதிர்பார்த்த நன்மையான காரியங்களை லோத்து அங்கே காணாமல், மிஞ்சின தீமையைக் கண்டான். இந்தப் பட்டணங்களின் கூக்குரல் பெரிதாயிருந்தபடியாலும், அவைகளின் பாவம் கொடியதாயிருந்தபடியாலும் (ஆதி. 18:20,21), தேவ கோபம் அவர்கள் பக்கமாகத் திரும்பியது.

ஆகவே, அப்பட்டணங்களை அழிக்க தேவன் முடிவு செய்த போது, நீதிமானுக்குத் தயை செய்யும் தமது வழக்கத்தின்படியே, தன்னுடைய தூதர்களைக் கொண்டு, லோத்துவையும், அவன் குடும்பத்தையும் அழிவிலிருந்து காப்பாற்றும் முயற்சியில் இறங்கினார். இங்கே வசனம் சொல்லுவதைக் கவனியுங்கள். **"கிழக்கு வெளுக்கும்போது அந்தத் தூதர் லோத்தை நோக்கி: பட்டணத்திற்கு வரும் தண்டனையில் நீ அழியாதபடிக்கு எழுந்து, உன் மனைவியையும், இங்கே இருக்கிற உன் இரண்டு குமாரத்திகளையும் அழைத்துக் கொண்டு போ என்று சொல்லி, அவனைத் துரிதப்படுத்தினார்கள். (வ.15). அவன் தாமதித்துக் கொண்டிருக்கும்போது, கர்த்தர் அவன்மேல் வைத்த இரக்கத்தினாலே, அந்தப்புருஷர் அவன் கையையும், அவன் மனைவியின் கையையும், அவன் இரண்டு குமாரத்திகளின் கையையும் பிடித்து, அவனைப் பட்டணத்திற்கு வெளியே கொண்டு போய் விட்டார்கள் (வ.16). அவர்களை வெளியே கொண்டு போய் விட்ட பின்பு, அவர், உன் ஜீவன் தப்ப ஓடிப்போ, பின்னிட்டுப் பாராதே; இந்தச் சமபூமியிலே எங்கும் நில்லாதே; நீ அழியாதபடிக்கு மலைக்கு ஓடிப்போ என்றார்"** (ஆதி. 19:17). தொடர்ந்து வசனங்களைப் படிக்கும்போது, 26வது வசனம் இப்படிச் சொல்லுகிறது. **"லோத்தின் மனைவியோ பின்னிட்டுப் பார்த்து உப்புத் தூண் ஆனாள்"** என்று.

லோத்தின் மனைவி, அங்கே வீணாக அழிந்து போனாள். அழிந்து இன்றும் பேசப்படும் ஒரு நினைவுச் சின்னமாக உள்ளாள். அவளைப் போல, **"எனக்குப் பிரியமான சீடர்களே நீங்களும் அழிந்து போய்விட வேண்டாம். நித்திய ஜீவனுக்குப் பங்காளிகளாக மாறுங்கள்" என்பதே. லோத்துவின் மனைவியை நினைப்பூட்டியதற்கான காரணம்.** அப்படித்தானே தெரிகிறது.

சரி, திருமதி லோத்துவின் அழிவிலிருந்து நமக்குக் கிடைக்கும் பாடங்கள் என்னவென்று இப்பொழுது பார்ப்போம்.

## I. தப்பும் வழி கிடைத்தும் அழிந்து போனாள் (வ.15,16)

திருமதி லோத்துவின் அழிவிலிருந்து நமக்குக் கிடைக்கின்ற முதல் பாடம், தப்பித்துக் கொள்ளும்படியான வாய்ப்பு அவளுக்குக் கொடுக்கப்பட்டிருந்தும் அவள் அழிந்து போனாள் என்பது.

ஆம், வசனங்கள் 15, 16 ஆகியவைகளைக் கவனிக்கும்போது, தேவன் லோத்தின் குடும்பத்தின் மீது காட்டின பரிவு, கரிசனை நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. பட்டணத்துக்கு வரும் அழிவிலிருந்து காப்பாற்றப்படுவதற்கு, தன்னுடைய தூதர்களைக் கொண்டு துரிதப்படுத்தினதோடல்லாமல், அவர்கள் இன்னும் தாமதித்துக் கொண்டிருந்தபோது, கையைப் பிடித்துக் கொண்டு போய் வெளியே விட்டார். தான் நேசிக்கிறவர்கள் காரியத்தில், தேவன் இதற்குமேல் என்னதான் செய்ய முடியும்? ஆனால், இவ்வளவுக்குப் பிறகும் அந்த மனுஷி, திரும்பிப் பார்த்து, அழிந்து போனாள்.

அன்பானவர்களே, இந்த லோத்துவின் மனைவியுடைய நிலையோடு, இயேசுவின் சீடர்களாக, அவரைப் பின்பற்ற விரும்புகிறவர்களின் நிலையை ஒப்பிட்டுப் பார்ப்போம். பாவத்தின் கோரப்பிடியில் சிக்கிச் சீரழிந்து கொண்டிருந்த சோதோம் கொமோராவின் அழிவிலிருந்து, தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும்படியான வாய்ப்பைத் தேவன் தமது மிகுந்த இரக்கத்தின்படியாகத் தந்தது போல, இந்தப் பாவ உலகத்திலிருந்தும், நரக ஆக்கினையிலிருந்தும் தப்பித்துக் கொள்ளும்படியான வாய்ப்பைத் தேவன் நம் ஒவ்வொருவருக்கும் தந்துள்ளார். அவரைப் பின்பற்ற விரும்பும் ஒருவரும் கெட்டுப் போகக் கூடாதென்பதே தேவனின் விருப்பம் (II பேது.3:9).

மனிதர்களாகிய நம்மீது, பரலோகத்தின் தேவன் காட்டியுள்ள தயவை, இங்கே பாருங்கள். முதலாவது, நம்முடைய பிறப்பே ஆச்சரியமான ஒன்று. தாவீது இது குறித்துச் சொல்லும்போது, "நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால் உம்மைத் துதிப்பேன்...." என்று கூறுகிறார் (சங்.139:14). இப்படி பிரமிக்கத்தக்க அதிசயமாக நம்மைப் படைத்த தேவன், நம்மை அவரது சாயலாக, நித்தியத் தன்மையோடு படைத்துள்ளார் (ஆதி.1;26,27). மேலும், அவருடைய சாயலாக, நித்திய தன்மையோடு படைக்கப்பட்ட நாம், அவரோடு

என்றென்றும் வாழும் பாக்கியத்தை, பாவத்தினால் நாம் இழந்தபோது, நம்மைத் திரும்பவும் தம்மிடம் சேர்க்கும்படியாய், தன்னுடைய ஒரே பேரான குமாரனை இப்பாழும் உலகிற்கு அனுப்பிக் கொடுத்தார். "தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்" (யோவா.3:16). அந்தக் குமாரனும், தான் கோரச் சிலுவையில் கொல்லப்படுவதற்கு தன்னை அனுமதித்தார். அவருடைய இரத்தத்தினாலே நாம் கழுவப்பட்டு, ஆத்தும இரட்சிப்படைந்து, நாளும் அவருக்குள் வளர்ந்து, கனிதந்து, தெய்வீக சுபாவத்தில் பங்குள்ளவர்களாகும்படி, பரிசுத்த ஆவியானவராலே தேவ வசனத்தைக் கொடுத்தார் (II தீமோ.3:16,17,IIபேது1:4). அந்த வசனங்கள், உலகெங்கும் பிரசங்கிக்கும்படியாய் அப்போஸ்தலருக்கும், சீடர்களுக்கும் கட்டளை கொடுத்தார் (மத்.28:18-20). மனிதன் மீது தன்னுடைய அன்பைக் காட்டுவதற்கு, அவனுக்குள்ளாக தான் உண்டாக்கின ஆத்துமாவின் மீது தனக்குள்ள பாரத்தைக் காட்டுவதற்கு, தேவன், இதற்குமேல் என்னதான் செய்ய முடியும்?

"இதோ, வாசற்படியில் நின்று தட்டுகிறேன்" (வெளி.3:20) என்ற வசனத்திற்கு ஒப்ப, உலகில் வாழும் ஒவ்வொருவரும், ஆத்தும இரட்சிப்படையும்படியான ஜீவனுள்ள வார்த்தைகள், விதவிதமான வழிகளில் நம்முடைய வீடு தேடி வந்து கொண்டிருக்கிறது. இவ்வளவுக்குப் பிறகும், ஒருவன் தன் ஜீவனை இழந்து போகிறான் என்றால், அவனைக் குறித்து நாம் என்ன சொல்ல முடியும்? இன்னொரு லோத்தின் மனைவி என்று சொல்வதைத் தவிர!

நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்து, "லோத்தின் மனைவியை நினைத்துக் கொள்ளுங்கள்" என்று நமக்கு அறிவுறுத்தி, நம்மை எச்சரித்திருப்பதை நாம் அற்பமாக எண்ணிவிட வேண்டாம். நாம், நித்திய அழிவுக்குத் தப்பிக் கொள்ளும்படியாய் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் வாய்ப்புகளை, வெகு நேர்த்தியாகப் பயன்படுத்தி, பாவங்கள் கழுவப்பட்டு, நம்முடைய ஆத்தும இரட்சிப்பு நிறைவேற பயத்தோடும், பக்தியோடும் பிரயாசை எடுப்போம்.

## II. எச்சரிக்கப்பட்டும் அழிந்து போனாள் (வ.17)

திருமதி லோத்துவின் அழிவிலிருந்து நமக்குக் கிடைக்கின்ற இரண்டாம் பாடம், மிகச் சரியான முறையில் எச்சரிக்கப்பட்டிருந்தும், அவள் அழிந்து போனாள் என்பது.

லோத்தின் மனைவி தப்பிக்கொள்ளும்படியான வாய்ப்புகளைக் கூட்டித் தந்த தேவன், ஒருவேளை அவள் அந்த வாய்ப்பை சரியாகப் பயன்படுத்தாமல் போகலாம் என்று எண்ணி, அவளைக் கடுமையாக எச்சரித்தார். இதோ வசனம், ".....உன் ஜீவன் தப்ப ஓடிப்போ, பின்னிட்டுப் பாராதே: இந்தச் சமபூமியிலே எங்கும் நில்லாதே; நீ அழியாதபடிக்கு மலைக்கு ஓடிப்போ" என்றார். இந்த

எச்சரிப்பு தேவனுடைய தூதனாலே, இந்த மனுஷிக்கு நேரிடையாகக் கொடுக்கப்பட்டது. ஆனாலும், இந்த மனுஷி தேவ எச்சரிப்பை அலட்சியம் செய்தாள். அதன் விளைவு அழிவு.

அருமையானவர்களே, லோத்தின் மனைவி நிலையோடு நம்முடைய நிலையை ஒப்பிட்டுப் பார்ப்போம். சர்வ வல்லமையுள்ள நமது பரலோக தேவன், நம்மை எச்சரித்து, நமது ஆத்துமாவை, நித்திய அழிவிலிருந்து காப்பாற்றும்படியாய், நம்மை மகாநாளின் நியாயத்தீர்ப்புக்கு ஆயத்தப்படுத்தும்படியாய் ஏராளமான வசனங்களை, தமது வேதாகமத்தில் வெளிப்படுத்திக் கொடுத்துள்ளார்.

இந்த வசனங்கள் என்ன சொல்கிறதென்று கவனியுங்கள். அப்போஸ்தலன் பவுல், தனது மார்சு மேடைப் பிரசங்கத்தின் முடிவிலே நியாயத் தீர்ப்பு நிச்சயம் என்று சொல்லி எச்சரிக்கிறார். மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந் தீர்ப்பார்; அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப் பண்ணினார் "(அப். 17;31). எபிரேய ஆசிரியர், இந்த பூமி யாருக்கும் சதம் அல்ல. எல்லோரும் மரித்தே ஆகவேண்டும் என்று கூறுகிறார். "அன்றியும் ஒரே தரம் மரிப்பதும், பின்பு நியாயத் தீர்ப்படைவதும்...." (எபி.9:27) என்று சொல்லுவதன் மூலம், பூமி யாருக்கும் சதம் அல்ல, ஒரு நாளில் எல்லோரும் மரித்தே ஆக வேண்டும் என்று எபிரேய ஆசிரியர் எச்சரிக்கிறார். சரீரத்தில் அவனவன் செய்த கிரியைகள் அவனோடு கூடவரும் என்று பவுலடியார் கொரிந்தியருக்கு எழுதி எச்சரித்துள்ளார். "ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும்" என்று (II கொரி.5:10). பாவம் செய்த தூதர்களுக்கே தண்டனை கிடைத்திருக்கும்போது, மனிதர்களே, நீங்கள் தப்பிக் கொள்ளலாம் என நினைத்து விடாதீர்கள் என்று எவ்வளவு கறாராக, அப்போஸ்தலன் யூதா பேசுகிறார் என்று பாருங்கள். "தங்களுடைய ஆதி மேன்மையைக் காத்துக் கொள்ளாமல், தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டுவிட்ட தூதர்களையும், மகா நாளின் நியாயத் தீர்ப்புக்கென்று நித்திய சங்கிலிகளினாலே கட்டி, அந்தகாரத்தில் அடைத்து வைத்திருக்கிறார்" (யூதா.6). அவபக்தியாய் நடப்பவர்களுக்கு நரகம் உறுதி என்று பேதுரு அப்போஸ்தலனும் தெளிவாகக் கூறியுள்ளார் (II பேது.2:4-6). இந்த நரகம் நித்தியமானதென்பதை நமது இரட்சகர் இயேசுக்கிறிஸ்து சந்தேகத்திற்கிடமில்லாமல், இப்பூமியிலிருந்தபோது சொல்லியுள்ளார். அப்பொழுது, இடது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து அவர்: "சபிக்கப்பட்டவர்களே, என்னை விட்டு, பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்" (மத்.25:41).

கவலையற்றிருப்பானானால், அவனை யாருக்கு ஒப்பிட முடியும்? கண்டிப்பாக, லோத்தின் மனைவிக்குத்தான். அவள், தேவ தூதனின் வார்த்தைகளாலே எச்சரிக்கப்பட்டிருந்தும் இழந்து போனாள். என்ன நடக்கும் என்று சொல்லப்பட்டிருந்தும் அலட்சியம் செய்தாள். தன்னைப் பின்பற்றுகிறவர்கள், இப்படி, புத்தியீனமாக நடந்து, தனது நித்திய வாழ்வை இழந்து போகக் கூடாதென்றுதான், நமதாண்டவர், "லோத்தின் மனைவியை நினைத்துக் கொள்ளுங்கள்" என்று சொன்னார்.

ஆகவே, வேத வசனங்களின் எச்சரிப்புகளை மதித்து, அதற்கு நம்மை ஒப்புக் கொடுத்து நாம் அழிவிலிருந்து காப்பற்றப்படுவோமாக!

## III. ஒரே ஒரு பாவத்தினால் அழிந்து போனாள் (வ.26)

திருமதி லோத்துவின் அழிவிலிருந்து நாம் கற்றுக் கொள்ள முடிகின்ற மூன்றாவது பாடம், ஒரு பாவத்தினால், ஆம் ஒரே ஒரு பாவத்தினால் அவள் அழிந்து போனாள் என்பது.

ஆதியாகமம் 19:26-ம் வசனத்தைப் படிக்கும்போது, உணர்வுள்ளவர்களுக்குக் கண்டிப்பாக கண்ணீர் வரும். வசனம் இவ்விதம் சொல்லுகிறது, **"அவன் மனைவியோ பின்னிட்டுப் பார்த்து, உப்புத் தூண் ஆனாள்"** என்று. இங்கே, அவள் செய்த பாவம் என்ன? **"பின்னிட்டுப் பார்த்தாள்"** அவ்வளவுதான். அடடா, அய்யய்யோ, ச்சச்சே இதெல்லாம் பாவமா என்று நமக்கு எண்ணத் தோன்றுகிறது. நாம் எப்படி நினைத்தாலும், இது தேவனுடைய பார்வையில் பாவமாகவே கருதப்பட்டு, தண்டனை, கடுமையான தண்டனை கொடுக்கப்பட்டுள்ளது. இந்தக் கடுமையான தண்டனைக்கு அவள் செய்த பாவங்கள் எத்தனை? அய்யோ பாவம்! அவள் செய்தது ஒரே ஒரு பாவம் மட்டுமே. எவ்வளவு ஒரு பரிதாபம் பாருங்கள்! இந்தப் பாவத்தின் கொடுமையை நினைத்தால் கோபம் கொப்பளித்துக் கொண்டு வருகிறது. இந்தப் பாவம் எவ்வளவு பயங்கரமான ஒன்றாக இருக்கிறதென்று சிந்தித்துப் பாருங்கள்.

அவள் அழிந்து போகாமல், காப்பாற்றப்படுவதற்கு, அவளுக்கிருந்த அனுகூலமான நிலையை கவனியுங்கள். ஒரு நீதிமானுக்கு மனைவியாயிருக்கும்படியான சிலாக்கியம் அவளுக்குக் கிடைத்தது. (II பேது.2:7,8). ஆயினும் இழந்து போனாள். தேவனுடைய விருப்பம், என்னவென்பது அவளுக்குச் சொல்லப்பட்டிருந்தது. அவைகளின்படி செய்ய, ஒருவகையாக முடிவெடுத்து, சரியான திசையில் பிரயாணத்தை மேற்கொண்டும், ஒரு பாவத்தால், அழிந்து போனாள்.

ஒரே ஒரு பாவத்தினாலே, தேவனாலே, கடுமையாகத் தண்டிக்கப்பட்ட அநேக உதாரணங்கள் பரிசுத்த எழுத்துக்களில் உண்டு. அவைகளைப் படிக்கும்போது, ஒருவேளை, தேவன் தான் தவறு செய்து விட்டாரோ என்று கூட எண்ணத் தோன்றும். ஆனால், சர்வலோகத்தின் தேவன் நீதிபரர் (சங் 48:10) அவர் ஒருபோதும் தவறிழைத்ததில்லை.

இவ்வளவு எச்சரிப்பு கொடுக்கப்பட்டும் கூட, ஒருவன் தன் நித்தியம் பற்றி ஒரு பாவத்தால், ஒரே ஒரு பாவத்தால், துரத்தப்பட்ட, இழந்துபோன, மரித்துப்போன சிலரை இங்கே கவனியுங்கள். ஆதிப் பெற்றோராகிய ஆதாமும், ஏவாளும், ஏதேன் தோட்டத்தை விட்டும், கர்த்தருடைய சமூகத்தை விட்டும் துரத்தப்பட அவர்களுக்கு எத்தனை பாவம் தேவைப்பட்டது? ஒரே ஒரு பாவம் தான். காலமெல்லாம் தான் பாடுபட்ட கானான் தேசத்துக்குள்ளாக காலடி வைக்க, தனக்கு அருகதை இல்லாமல் போவதற்கு, மோசேவுக்கு எத்தனை பாவம் தேவைப்பட்டது? ஒரே ஒரு பாவம்தான். தேவ காரியங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்த, ஊசா அவராலேயே அடித்துக் கொல்லப்படுவதற்கு, அவனுக்கு எத்தனை பாவம் தேவைப்பட்டது? ஒரே ஒரு பாவம்தான். சுவிசேஷங்களின் வழியாய் இரட்சிப்படைந்தும், அந்த சுவிசேஷத்திற்குத் தங்களை ஒப்புக்கொடுத்து வாழும் அளவுக்கு மனமிருந்தும், அப்போஸ்தலருக்கு முன்பாக, அடுத்தடுத்து விழுந்து சாவதற்கு, அனனியாவுக்கும், சப்பீராளுக்கும் எத்தனை பாவம் தேவைப்பட்டது? ஒரே ஒரு பாவம்தான்.

எனக்கன்பானவர்களே, இதைப் படிக்கும்போது பயமாக இல்லையா? தேவனிடத்தில் பட்சபாதம் இல்லையென்று வசனத்தில் காண்கிறோம். (அப்.10:34). அப்படியானால், பாவத்திற்கான தண்டனை கொடுக்கிற காரியத்-திலும் பட்சபாதம் இருக்காதுதானே. ஒரு பாவம் என்றாலும், தண்டிப்பார்தானே. மேலே சொல்லப்பட்டவர்களையெல்லாம், ஒரு பாவத்திற்காக தண்டித்த, நமது நீதியுள்ள தேவன், நமது பாவத்தை மாத்திரம் தண்டிக்காமல் விட்டு விடுவாரா என்ன? நிச்சயமாக தண்டிப்பார். ஒரு பாவம் கூட இல்லாத பரிசுத்த வாழ்க்கை வாழ முடியுமா என்று எண்ணுகிறீர்களா? நிச்சயமாக முடியும். இதை நான் சொல்ல-வில்லை. வேதவசனம் சொல்லுகிறது. "உங்களை அழைத்த தேவன் பரிசுத்த-ராயிருக்கிறது போல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள்" (I பேது.1:15) என்று. அன்பும், இரக்கமும் உள்ள தேவன், முடியாத ஒன்றை நாம் செய்ய வேண்டுமென்று எதிர்பார்ப்பாரா? நிச்சயமாக மாட்டார்.

ஆகவே, நாம் ஒவ்வொருவரும், ஒரு பாவம்கூட, இல்லாத பரிசுத்த வாழ்வு வாழ நம்மை ஒப்புக் கொடுப்போம். அப்படியே வாழ்வேன் என்று தீர்மானிப்போம். அதற்கான, தீவிர முயற்சியில் வேதவசனங்களின் துணையோடு கருத்தோடும், கண்ணீரோடும், ஜெபத்தோடும் இறங்குவோம். நம்முடைய ஒரே ஒரு பாவம்கூட நம்முடைய நித்தியத்தை விலை பேசக் கூடியதாக இருக்கிறதென்கிற உண்மையை முழுமையாகப் புரிந்து கொள்வோம். இதைப் புரிந்து கொண்டு, நம்முடைய இரட்சிப்பு நிறைவேற நாம் பிரயாசை எடுப்போமானால், அவருடைய வருகையில், கறையற்றவர்களும், பிழை- யில்லாதவர்களுமாய் அவர் சந்நதியில் காணப்படுவோம். (IIபேது.3:14).

பரலோகத்தின் தேவன் உங்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக! ஆமென்!

**S. ராஜ நாயகம்**

# குழந்தை ஞானஸ்நானம்

மத உலகில் குழந்தை ஞானஸ்நானம் மிக அதிகமாக பயன்படுத்தப்படுகிறது. ஆகிலும் இது வேதாகமத்தில் எங்குமே போதிக்கப்படவில்லை. எழுதப்பட்ட வசனம் உறுதியாக்கப்பட்டு அநேக ஆண்டுகள் கழித்தே இப்பழக்கம் ஆரம்பித்தது. சபை வரலாற்றில் குழந்தை ஞானஸ்நானத்தை உபதேசமாக எழுதின முதல் நபர் 'ஆரிஜன்' என்பவர். அறுநூறாம் ஆண்டுகளில் கத்தோலிக்க சபை உருவான பின்னர் மேற்கண்ட பழக்கத்தை (குழந்தை ஞானஸ்நானத்தை) கை கொள்ள ஆரம்பித்தனர். அநேக ஆண்டுகளுக்குப் பின் ஞான ஸ்நானத்திற்குப் பதிலாக தெளித்தல் அறிமுகப்படுத்தப்பட்டது. இதுவே சபை பிரிவுகளுக்கு வழி வகுத்தது. தெளித்தல் ஞானஸ்நானத்தை கை கொண்டோர் தொடர்ந்து அதை செயல்படுத்தினவர்களில் ரோமன் கத்தோலிக்க சபை குறிப்பிடத்தக்கது. அதை புறக்கணித்து, இந்நாள்வரை முழுக்குதல் ஞானஸ்நானத்தை கை கொண்டு வரும் கூட்டம் "கிரேக்க ஆர்த்தடேக்ஸ் சர்ச்" என்று அறியப்பட்டுள்ளது.

எல்லா மனுஷருக்கும் ஜென்ம பாவம் உண்டு என்ற நம்பிக்கை அடிப்படையில் குழந்தை ஞானஸ்நானம் கொடுக்கப்படுவது வளர்ச்சியடைந்தது. அதாவது, எல்லா குழந்தைகளும் ஆதாமின் பாவத்தை சுதந்தரித்துக் கொண்டு பிறக்கின்றன என்பதுதான் இவர்களின் போதனை. எல்லா மனுஷர்களும் பாவத்தின் விளைவுகளால் பாடுபடுகின்றனர் என்பது உண்மைதான். ஆனாலும் எந்த மனிதனும் வேறு எந்த மனிதனின் பாவத்தையும் சுதந்தரித்துக் கொண்டு பிறப்பதில்லை. 1 யோவான் 3:4ல், "பாவஞ்செய்கிற எவனும் நியாயப்பிரமாணத்தை மீறுகிறான், நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம்," என்று சொல்லப்படுகிறது. புதியதாய்ப் பிறந்த ஒரு குழந்தை இதை எப்படி செயல்படுத்தக்கூடும்? அதற்கு பிரமாணம் என்றால் என்ன என்று கூடத் தெரியாதே. வெகு காலத்திற்கு முன்பே, தேவனுடைய தீர்க்கதரிசி, "பாவம் செய்கிற ஆத்துமதவே சாகும். குமாரன் தகப்பனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதில்லை, தகப்பன் குமாரனுடைய அக்கிரமத்தை சுமப்பதுமில்லை: நீதிமானுடைய நீதி அவன் தலையின்மேல் தான் இருக்கும், துன்மார்க்கனுடைய துன்மார்க்கம் அவன் தலையின் மேல்தான் இருக்கும்." (எசேக்கியேல் 18:20).

"நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால், பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்," என்று இயேசு போதித்தார். (மத்தேயு 18:3). மேலும், "... சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்; அவர்களைத் தடை பண்ணாதிருங்கள்; பரலோக ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது என்று சொல்லி," (மத்தேயு 19:14). ஆதலால் கிறிஸ்து, சிறுபிள்ளைகள் சுத்தமானவர்கள், பாவமற்றவை, பாவத்தின் குற்றமற்றவர்கள் என்பதை மேற்குறித்த வசனங்களில்

படம்பிடித்துக் காட்டுகிறார். சிறுபிள்ளைகள் பாவத்திலும், அக்கிரமத்திலும் நிறைந்திருந்தால், ஒருவன் மனந்திரும்பி சிறுபிள்ளைகளைப் போலாகி, பரலோக இராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டும் என்ற வார்த்தையை நிச்சயமாக கிறிஸ்து பயன்படுத்தியிருக்கமாட்டார். மேலும் பிள்ளைகள் பாவத்தில் நிறைந்திருந்தால், பரலோக இராஜ்யம் சிறுபிள்ளைகளைப் போன்ற மனம் பெற்றோருக்குத்தான் என்று கூறியிருக்க மாட்டார்.

ஒரு குழந்தை பாவமின்றி இவ்வுலகத்தில் பிறக்கிறது. அவன் பாவத்தில் நிறைந்த உலகில் பிறக்கலாம், பாவத்தின் விளைவுகளினால் வரும் பாடுகளையும் அனுபவிக்கலாம். ஆனால் அவனது பிறப்பில் அவன் பாவமில்லாமலேயே பிறக்கிறான். கணக்கொப்புவிக்கும் பிராயத்தை அவன் அடையும் வரை தேவனுக்கு முன்பாக சுத்தமாகவும், கபடமற்றவனுமாக இருக்கிறான். நன்மை, தீமை அறிகிற பிராயத்தை அடையும் பொழுதுதான் தனது செயல்களுக்கு அவன் பொறுப்பேற்கிறான். அதற்கு பின்பு தான் கர்த்தருக்கு அவன் கீழ்படிய வேண்டியவனாகிறான். கணக்கொப்புவிக்கும் பிராயத்தில் உள்ளவர்களுக்கே, இரட்சிப்பின் திட்டம் வரையறுக்கப்பட்டுள்ளது. இரட்சிப்பின் திட்டத்தை தேவன் குழந்தைகளுக்கு அறிவிக்கவில்லை. அவைகள் பாவமின்றி இருப்பதால், தேவனுக்கு முன்பாக பாதுகாப்பாக உள்ளன. அவைகள் மரித்தாலும் கர்த்தருடன் போய்ச் சேருகின்றன. தாவீதின் குழந்தை மரித்தபோது, நான் பிள்ளை-யினிடத்தில் செல்லுவேனேயன்றி, பிள்ளை என்னிடத்தில் வராது என்று அவர் சொன்னார். (2 சாமுவேல் 12:22).

ஒரு ஆத்துமாவிற்காக ஒரு தனி நபரோ அல்லது நன்கு காரியங்களை அறிந்த தகப்பனோ தாயோ எப்படி பொறுப்பேற்க முடியும்? தான் புரிந்து கொள்ளாததும் தன்மீது திணிக்கப்படுகின்றதுமான ஒன்றின் பலனை ஒரு பிள்ளை (குழந்தை) எப்படி பெற்றுக் கொள்ளக்கூடும்? சத்தியத்தை கேட்கும் அளவிற்கு பிராயம் அடைந்தவர்களுக்கு கர்த்தர் வழிகாட்டுகிறார். (மத்தேயு 28:19) ரோமர் 10:10; எபிரேயர் 11:6), தங்கள் பாவங்களுக்காக மனந்திரும்பவும் (லூக்கா 13:3; அப்போஸ்தலர் 17:30), தங்கள் வாயினால் அறிக்கையிடவும் (ரோமர் 10:10; மத்தேயு 10:32), ஞானஸ்நானம் பெறவும் (மாற்கு 16:16; அப். 2:38), உரிய வயதை அடைந்தவர்களுக்கே கர்த்தர் வழிகாட்டுகிறார். ஒரு குழந்தை ஜெபிக்கவும், கர்த்தருடைய பந்தியிலே பங்கு பெறவும் மற்றவர்களுக்கு போதிக்கவும், தேவனைத் துதித்துப் பாடவும் கூடுமா? அவனால் முடியாது என்று உங்களுக்கு தெரியும், ஆகிலும் மேற்குறித்தவைகளை ஒரு கிறிஸ்தவன் செயல்படுத்த வேண்டும். ஆகையால் தேவனுடைய திட்டமெல்லாம் குழந்தை-களுக்கு அல்ல, முதியோர்களுக்கே; தேவனுக்கு முன்னாக பாவிகளும், கணக்கொப்புவிக்க ஏதுவான பிராயம் அடைந்தவர்களுக்குமே.

இறுதியாக, குழந்தை ஞானஸ்நானம் ஞானஸ்நானமே அல்ல, மத ரீதியிலே ஏராளமானோர் பின்பற்றுவது தெளித்தலும் ஊற்றுதலுமாகும். ஆனால் அது ஞானஸ்நானமாகாது. முதலாவதாக ஞானஸ்நானம் என்பது ஒரு அடக்கம் பண்ணப்படுதலாகும். அப்போஸ்தலனாகிய பவுல் கூறுவதைக் கேளுங்கள்:

"ஞானஸ்நானத்திலே அவரோடே கூட அடக்கம் பண்ணப்படுதலாகும். அப்போஸ்தலனாகிய பவுல் ஞானஸ்நானத்திலே அவரோடே கூட அடக்கம் பண்ணப்பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்து எழும்பி தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினலே, அவரோடேகூட எழுந்தவர்களாகவும்இருக்கிறீர்கள்."கொலோசேயர்2:12.

"கிறிஸ்து' இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம். (ரோமர் 6:3,4). மேலும் அப்போஸ்தலர் 8-ம் அதிகாரத்தில் தண்ணீருக்குள் மந்திரியை பிலிப்பு கூட்டிச் சென்றான் என்ற உதாரணத்தைக் காண்கிறோம். என்ன நடந்தது? அவன் அந்த மனிதனை தண்ணீரில் அடக்கம் பண்ணி, அல்லது முழுக்கி ஞானஸ்நானப்படுத்தினான். இரண்டாவதாக, ஞானஸ்நானம் சரியான நோக்கத்திற்கு கொடுக்கப்பட வேண்டும். ஒருவன் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற வேண்டுமென்று கிறிஸ்து கூறினார், (மாற்கு 16:16). ஒருவர் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற வேண்டுமென்று பேதுரு சொன்னார். (அப்போஸ்தலர் 2:38). மேலும் கிறிஸ்து, அது (ஞானஸ்நானம்) பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே செய்யப்பட வேண்டும் என்று சொன்னார். (மத்தேயு 28:19) இறுதியாக ஒரே ஞானஸ்நானம் மட்டுமே உண்டு. (எபேசியர் 4:5), மேலும் ஏற்கனவே குறிப்பிட்டபடி, அது எப்போதுமே அடக்கம் பண்ணப்படுதலையும், அவரை (ஞானஸ்நானம் பெற்றவரை) கிறிஸ்துவுக்குள்ளாக்குவதும் சபைக்குள்ளாக்குவதுமான செயல் இது. (கலாத்தியர் 3:26,27; 1 கொரிந்தியர் 12:13) இல்லை, குழந்தைகள் ஞானஸ்நானம் பெற வேண்டுவதில்லை, ஆனால் அவர்களுடைய தகப்பன்மார்களும், தாய்மார்களும் கர்த்தருக்கு கீழ்படியவேண்டும். நீங்கள் வசனப்படி ஞானஸ்நானம் பெற்றுள்ளீர்களா?

**J.C. CHOATE** **J.C. சோட்**

## அதுல்லாம் பட்டணம் பற்றி

யூதா நாட்டிலுள்ள ஒரு கானானியப் பட்டணம் (யோசு 12:15). ரெகொபெயாம் இப்பட்டணத்தை அரணானதாக கட்டினான் (II நாளா. 11:7); இது மீகாவால் எழுதப்பட்டுள்ளது (மீகா 1:15); அடிமைத்தனத்திலிருந்து மீண்டு வந்த இஸ்ரவேலர்கள் இதை மீண்டும் சுதந்தரித்துக் கொண்டார்கள் (நெகேமியா 11:30). இப்பட்டணம் எருசலேமுக்கும் லாகீசுக்கும் நடுவே அமைந்திருந்தது, சவுலால் துரத்தப்படும்போது தாவீது ஒளிந்து கொண்ட குகை இப்பகுதியில் இருந்திருக்கக் கூடும் என்று நம்பப்படுகிறது

# உங்கள் கணவரிடத்தில் அன்பாயிருங்கள்

சென்ற மாத இதழில் "அகபே அன்பு" என்பது என்ன என்பதை உதாரணத்துடன் பார்த்தோம். சத்துருவை சிநேகிக்க வேண்டும், நம்மை நித்திப்பவர்களுக்காக ஜெபம் செய்ய வேண்டும் என பார்த்தோம்.

அவர்கள் செய்யும் தீமையில் நாம் அன்பு செலுத்தக்கூடாது. ஆனால் நாம் அவர்களை நேசிக்க வேண்டும். அதற்கு அநேக முக்கிய காரணங்கள் உள்ளன.

அ. ஏனென்றால், தேவன் நம்மை அவ்வாறு செய்யும்படியாக கட்டளை கொடுத்திருக்கிறார். நாம் அவர்மேல் வைத்திருக்கும் அன்பும், அவரைப் பற்றிய பயமும் நம்மை அவ்வாறு அவருக்கு கீழ்ப்படியும்படியாக தூண்டுகிறது.

ஆ. ஏனென்றால், தேவன் நம் எல்லோரையும், தம் சொந்த சாயலாகவும், அவரைப் போலவும் சிருஷ்டித்தார்.

இ. இறுதியாக, தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து விலைமதிக்க முடியாத தம்முடைய இரத்தத்தை சிந்தினதினாலே நாம் அவ்வாறு செய்ய வேண்டும். எல்லா மனிதர்களுக்காகவும் அவர் மரித்தார்.

II. இந்த அகபே அன்பை பெற்றுக் கொள்ள நம்முடைய மனதை தயார் படுத்திக் கொள்ள வேண்டும். மற்றவர்களுக்கு நன்மை செய்வதில் நியாயமான, தன்னலமற்ற ஒரு தன்மையை அகபே அன்பு கொண்டுள்ளது. ஒருவேளை அவர்கள் நமக்கு தீமையே செய்தாலும் நாம் இந்த அன்பை வெளிப்படுத்த வேண்டும்.

III. இந்த "அகபே அன்பு" என்பது துன்பமான நேரங்களில் நம்மைப் பார்க்கக் கூடியது. நம்மு-டைய மிருதுவான பாசத்தை வளர்த்துக் கொள்ள இது உதவுகிறது.

பெண்களிடத்தில் காணப்பட வேண்டிய இந்த அகபே அன்பின் ஒரு பகுதி கீழ்ப்படிதல் என்பதாகும். எபேசியர் 5:22-24 ஆகிய வசனங்களை வாசித்துப் பாருங்கள். இங்கு மனைவிகள் தங்கள் புருஷருக்கு கீழ்ப்படிய வேண்டும் என்று கட்டளை கொடுக்கிறார். தேவனுக்கு கீழ்ப்படிவது போல புருஷருக்கு கீழ்ப்படிய வேண்டும். இப்படிச் செய்வது நம் புருஷருக்கு நாம் கொடுக்கக் கூடிய விலையேறப் பெற்ற நன்கொடை. நாம் நம்முடைய விருப்பத்தை விட்டுவிட்டு, அவருடைய தலைமையை பின் தொடர்ந்து செல்ல வேண்டும். தயவு செய்து இங்கு கவனியுங்கள், தேவன் ஆண்களிடம் தங்கள் மனைவிகளை கீழ்ப்படியச் செய்யும்படியாக கட்டளை கொடுக்கவில்லை. மாறாக, மனைவிகளே தங்களை புருஷருக்கு கீழ்ப்படியச் செய்ய வேண்டும் என்று கட்டளை கொடுக்கிறார். ஏன் இவள் இவ்வாறு செய்கிறாள் என்றால், தேவன் மனிதனை குடும்பத்தின் தலைவனாக நியமித்திருக்கிறார். எப்படி கிறிஸ்து சபைக்கு தலைவராக இருக்கிறாரோ அதுபோல. மேலும் அவள் முதலாவது பிதாவையும், கிறிஸ்துவையும் நேசிப்பதினால் அவ்வாறு செய்கிறாள். தன் கணவனை இரண்டாவதாக நேசிக்கிறாள். II. கொரி. 11:3ஐ

வாசியுங்கள். இது தேவனுடைய அதிகாரத்தின் திட்டமாயிருக்கிறது.

கீழ்ப்படிதலைப் பற்றிய ஒரு அழகான விளக்கம் I பேதுரு 3:1-6 வசனப் பகுதிகளில் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு பெண்ணின் கீழ்ப்படிதல் என்பது அவள் உள்ளத்தில் இருந்து ஏற்பட வேண்டும். அந்த இருதயம், தேவனுடைய திட்டத்தின்மேல் நம்பிக்கையும், விசுவாசமும் கொண்ட இருதயமாக இருக்க வேண்டும். இது சாந்தமும், அமைதலுடனும் கூடிய கீழ்ப்படிதல். இத்-தன்மையானது அவள் யார் என்பதை இயற்கையாகவே காட்டிவிடுகிறது.

ஒருவேளை, நாம் நம் கணவருக்கு கீழ்ப்படியாத ஆவியைப் பெற்றிருப்-போமானால், மூன்று காரியங்கள் அங்கே நிகழுகிறது.

1. தேவனுடைய வார்த்தைக்கு அவமானத்தை கொண்டு வருகிறோம்.

2. அவருடைய இரட்சிப்பின் திட்டத்துக்கு இழுக்கை கொண்டு வருகிறோம்.

3. கிறிஸ்து தன் இரத்தத்தை சிந்தி சம்பாதித்த சபைக்கு அவமானத்தை கொண்டு வருகிறோம்.

எபேசியர் 5ம் அதிகாரத்தில் உள்ள விஷயங்களை தயவு கூர்ந்து கவனிப்போம். ஒவ்வொரு பெண்ணும் தன்னை கீழ்ப்படியச் செய்ய வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார். ஒரு வேளை அவளுடைய கணவன் ஒரு கிறிஸ்தவனாக இருக்கலாம் அல்லது இல்லாமல் இருக்கலாம். ஆனால் இதுதான் உண்மை. இதை நாம் I பேதுரு 3:1-6 வசனப் பகுதிகளின் மூலமாக தெரிந்து கொள்கிறோம். விசுவாசமில்லாத கணவனுக்கு கீழ்ப்படிந்திருக்க வேண்டுமென்று தேவன் மனைவிகளுக்கு சொல்லு-கிறார். நம்முடைய செயல்பாடுகள் தேவனுடைய வார்த்தையை தூஷிக்-கக்கூடும் என்று மீண்டுமாக கூறுகிறார். அல்லது தேவனுடைய வார்த்தைகளுக்கு ஒளியூட்டத்தக்-கதாக பிரகாசிக்க முடியும். நாம் செய்யக்கூடிய ஒவ்வொரு தியாகமும், பிதாவும், அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவும் செய்த தியாகத்-தோடு ஒப்பிடவே முடியாது.

கீழ்ப்படிந்து இருக்க வேண்டும் என்று சொல்லும் போது நம்முடைய உணர்வுகளை வெளிப்படுத்தவே கூடாது என்பது அர்த்தமல்ல. சாந்த-மும், அமைதலுடன் கூடிய கீழ்ப்-படிதலை நினைத்துக் கொள்ளுங்கள். தேவனுக்கு கீழ்ப்படிகிறோம் என்ப-தையும் நினைவில் வைத்துக் கொள்-ளுங்கள். தேவன் தங்களுக்கு கொடுத்த அதிகாரத்தினால் உங்கள் கணவன்மார்கள் ஒருவேளை தவறு செய்யலாம். நம்மைப் பார்த்து அவர்கள் கற்றுக் கொள்ள வாய்ப்புள்ளது. நம்முடைய தவறுகள் மூலமாகத்தான் நாம் நிறைய காரியங்களைக் கற்றுக் கொள்ள முடியும். தேவனுடைய வார்த்தையை படித்ததினிமித்தமாக நீ கற்றுக் கொண்டதை உன் கணவனோடு பகிர்ந்து கொள். அந்த வார்த்தைகளை உன் வாழ்க்கையில் பயன்படுத்தி அதன் மூலமாக கிடைத்த அனுபவங்களை உன் கணவனோடு பகிர்ந்து கொள். அவருடைய வழியிலே அவர் செல்லும் போது பொறுமையாயிரு. தேவன் உன்மீது பொறுமையா-யிருக்கிறார் என்பதை நினைத்துக் கொள். "நான் உங்களுக்கு சொன்னேன் இல்லையா? அல்லது "கவனித்தால் தானே" அல்லது "எப்போது தான் கற்றுக் கொள்வாரோ?" என்றெல்லாம் நாம் சொல்லவே கூடாது.

சாந்தமும், அமைதலும் உள்ள ஆவியுடன் கூடிய கீழ்ப்படிதல் இல்லாத பெண்களைப் பற்றி, தேவன் கொடுக்கும் விளக்கங்கள் சிலவற்றைப் பார்ப்போம்.

நீதி : 12:4. "....... இலச்சை உண்டு பண்ணுகிறவளோ அவனுக்கு எலும்புருக்கியாயிருக்கிறாள்".

நீதி : 19:13. "மூடனாகிய மகன் தன் தகப்பனுக்கு மிகுந்த துக்கம்; மனைவியின் சண்டைகள் ஓயாத ஒழுக்கு".

நீதி : 21;9,19 "சண்டைக்காரி-யோடே ஒரு பெரிய வீட்டில் குடியிருப்பதைப் பார்க்கிலும், வீட்டின் மேல் ஒரு மூலையில் தங்கியி-ருப்பதே நலம்".

"சண்டைக்காரியும், கோபக்காரி-யுமான ஸ்திரீயுடன் குடியிருப்பதைப் பார்க்கிலும், வனாந்தரத்தில் குடி-யிருப்பதே நலம்".

யோபின் மனைவியை நினைத்துக் கொள்ளுங்கள். யோபு : 2:9. அவள் தன் கணவனையும், தேவனையும் முழுவதுமாக அவமரியாதை செய்தாள்.

**மேலும் சில கருத்துக்கள் :**

நீதி : 15:1, எபேசியர் 4:26; படுக்கைக்கு செல்லும் போது கோபத்துடன் செல்ல வேண்டாம். அவ்வாறு செய்யும் போது நாம் ஒவ்வொரு நாளையும் சமாதானத்-தோடும், பூரிப்போடும் துவங்க உதவி செய்யும்.

I யோவான் 3:15 நாம் நம்முடைய கணவனை, நம் சகோதரனைப் போல நேசியாவிட்டால், தேவனுடைய அன்பு நம்மிடத்திலே இருக்காது.

லூக்கா 14:7-11 அன்பிற்கு அடை-யாளமே, நம்முடைய தாழ்மையான ஆவிதான். எப்படி கிறிஸ்து தன்னைத் தாழ்த்தி தம்முடைய அன்பை நம்மேல் வெளிப்படுத்தினாரோ, அதே போல். பிலி : 2:8

III யோவான் : 9. நீ செய்யும் வேலைக்கு மற்றவர்கள் உன்னைப் பார்த்து புகழ்ந்து, மகிமைப்படுத்த வேண்டும் என்று எதிர்பாராதே.

தேவன் உன்னை உன் கணவருக்கு துணையாக சிருஷ்டித்தார். ஒரு ஆண் சிறந்தவனாக இருக்கும்-படியாக பெண் அவனுக்கு கொடுக்-கப்பட்டிருக்கிறாள். அவள் தன் அன்றாட வேலைகளை செய்து கொள்ள அவனுக்கு உதவியாக அவள் இருக்கிறாள். அவனை உற்சாகப்படுத்துகிறவளும், அவனை உருவாக்குகிறவளுமாய் பெண் என்பவள் செயல்படுகிறாள். ஆதரிக்கிறவளாயும், மன்னிக்கிறவளாயும் பெண் இருக்-கிறாள். தன் கணவனின் பெலத்திலும், பெலவீனத்திலும் அவனுக்காக ஜெபிப்பவளாக பெண் இருக்கிறாள். ஒரு குடும்பத்தை உருவாக்கி, அதை பாதுகாப்பாக வழிநடத்துகிறாள். சந்தோஷமும், சமாதானமும் அவளால் கிடைக்கிறது. அவனுக்கு நல்ல நண்பனாகவும், துணையாகவும் இருக்கிறாள். நீங்கள் எதைச் செய்கிறீர்களோ அந்த காரியம் முதலாவது உங்கள் கணவரையும், பிறகு தேவனையும், அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவையும், சபையையும், கடைசியாக உங்களையும் அது பாதிக்கக் கூடியதாக உள்ளது. உங்களுடைய காரியங்கள் அன்பு, மரியாதை, மகிமை சேர்க்கக் கூடியதாக உள்ளதா? அல்லது, யோபின் மனைவியைப் போல இருள் சூழ்ந்த, மரியாதையற்றதாக உள்ளதா? உங்கள் கணவனுடன் சேர்ந்து ஆலோசனை செய்ய ஒரு நல்ல வசனப் பகுதியைப் பாருங்கள். சங் :34:3 "..... நாம் ஒருமித்து அவர் நாமத்தை உயர்த்துவோமாக"

மேற்கண்ட ஆலோசனைகளை கடைபிடித்து குடும்பத்தில் ஜீவிப்போமானால் நிச்சயமாக தேவனுக்கு பிரியமானவர்களாயும், கணவனின் அன்பு கூறுகிறவர்-களாயும் இருப்போம். அப்படிச் செய்ய தேவன் உதவி செய்வாராக!

**மேரி டீ பால்மா** **ரேச்சல் நாயகம்**

# எத்திக்கிலும் ஒலிக்கட்டும்

**பா**ர்க்கிற எவருக்கும் பிரமிப்பூட்டும் பிரமிடுகள் பிரகாசிக்கும் எகிப்திலிருந்து இஸ்ரவேலர்களின் வாழ்க்கையை மேலெழுந்தவாரியாகக் காண்கையில் பிரகாசித்தாலும், உள்ளாக சடலங்கள் நிறைந்த பிரமிடுகளைப் போலவே சங்கடங்களும், சிரமங்களும், சச்சரவுகளும் நிறைந்ததாயிருந்தபடியால் பரமதேவனின் வாக்குத்தத்த தேசமாகிய பாலும் தேனும் பிரவாகித்துப் புறப்பட்டோடும் கானானுக்கு எப்படியாகிலும் சென்றடைய வேண்டுமென்ற பேராவலுடன், அகிலத்தையும் ஆகாயத்தையும் உண்டாக்கின உன்னதரின் செட்டைகளின் கீழ் வனாந்திரயாத்திரையாக வருகையில், கரைபுரண்டோடும் யோர்தானைக் கடந்த சம்பவத்திலிருந்து "அன்பு, "ஜெபம்", "பயபக்தி", "தியானம்" என்கிற கற்களை நாம் இதுவரைக் கண்டோம்.

"கர்த்தருக்குப் பிரியமானவன்" என்ற பொருள் தரும் "யெதிதியா" என்ற மறுபெயர் கொண்ட "சாலமோன்" யாத்துக் கொடுத்த நீதிமொழிகளில்".... ஞானவான் போதிக்கப்படும்போது அறிவடைவான்" என்றும் "கர்த்தருக்குப் பயப்படுதல் ஞானத்தைப் போதிக்கும்..." என்றும் மொழிந்திருக்கிறார் (21:11; 15:33) வாலிபர்களாகிய நீங்கள் ஞானத்தைப் பெற்று அறிவடைந்து கர்த்தருக்குப் பயந்து நடப்பவர்களாயிருக்க வேண்டுமென்றதாலும் இம்முறை "**போதனை**" என்கிற கல்லை உங்கள் முன் நிறுத்துகிறேன்.

## "போதனை என்ற கல்"

"போதனை" என்பது முழுக்க முழுக்க தேவனுடைய வார்த்தையின் அடிப்படையிலிருக்க வேண்டும். ஒருவர் முதலாவது கர்த்தருடைய வேதத்தை படித்தும், பகுத்தும், அறிந்து வேதம் என்ன கூறுகிறது என்பதைத் தெளிவாகப் புரிந்து கொண்டபின், தேவன் மனித குலத்திற்குத் தன் வார்த்தையில் எதை எல்லாம் கூறுகிறார் என்பதை எளிமையாகப் புரிந்து கொள்ளும் வகையில் எடுத்துரைப்பதே "போதனை" என்பதாகும்.

வாலிபர்களாகிய நீங்கள் "போதனை" அல்லது "கர்த்தருடைய வார்த்தையை எடுத்துக் கூறுவது" என்பது உங்கள் மேல் உள்ள கடமை என்பதைக் கவனிக்க வேண்டும். சென்ற திங்கள் நாம் கவனித்த கல்லான "தியானம்" எனும் கல் உங்களிடம் அதிகமிருக்குமானால் எரேமியா தீர்க்கன் "........ ஆனாலும் அவருடைய வார்த்தை என் எலும்புகளில் அடைபட்டு எரிகிற அக்கினியைப் போல் என் இருதயத்தில் இருந்தது. அதைச் சகித்து இளைத்துப்போனேன் எனக்குப் பொறுக்கக்கூடாமற் போயிற்று" (20.9) என்று கூறுவது போல், நீங்களும் கர்த்தருடைய வார்த்தையை உங்களுக்குள் வைக்காமல் அநேகர் பயனடையும்படி எடுத்துரைப்பீர்கள் என்பது திண்ணம்.

"போதனை" என்கிற கல் சுமக்கும் முன் வாலிபர்களாகிய நீங்கள் அறிந்து கொள்ள வேண்டியது யாதெனில் நம்முடைய கையிலிருக்கும் வேதாகமம் முழுமையும், ஒவ்வொரு எழுத்தும், உறுப்பும் கர்த்தருடையது என்பதுதான் தாவீது கூறுவதைக் கவனியுங்கள் "கர்த்தருடைய ஆவியானவர் என்னைக் கொண்டு பேசினார்; அவருடைய வசனம் என்னுடைய நாவில் இருந்தது "(II சாமுவேல்

23:2) இக்கருத்துக்கு மேலும் வலு சேர்க்கும் வண்ணம் சகரியா தீர்க்கன் கூறுவதையும் பாருங்கள், "..... முன்னிருந்த தீர்க்கதரிசிகளைக் கொண்டு கர்த்தர் **கூறின வார்த்தைகள்** இவைகள் அல்லவோ என்று சொல் என்றார்.

வாலிபர்களே! நாம் தெரிந்து கொள்ள வேண்டிய அதிமுக்கியமானது எதுவெனில் கிறிஸ்துவின் காலத்திற்குப் பின்பு வாழும் நாம் செய்யும் அல்லது கேட்கும் ஒவ்வொரு போதனையிலும் உலக மீட்புக்காக தனது பரலோகப் பதவியை விடுத்து மனித ரூபம் கொண்டு பிரதான ஆசாரியரானாலும் என்ன! வேதபாரகரானாலும் என்ன!! என் தந்தையின் சித்தத்தை மாற்றுகிறவர்களின் வண்டவாளங்களைச் சுட்டிக்காட்டியே தீருவேன். வறண்ட மதியினர் வந்தனம் செலுத்தமாட்டார்கள் என்பதற்காக, வஞ்சகரின் அடிபணிய மாட்டேன்! என்று தனது தந்தையின் சித்தத்தின்படி மனித குலத்திற்கு மீட்பை உண்டுபண்ணும்படியாக கோரச் சிலுவைக்குத் தன்னையே தந்த தியாக வள்ளலின் சுவிசேஷம் இடம் பெற்றிருப்பது அத்தியாவசியமானது என்பதுதான்.

வாலிபர்களே! அப்போஸ்தலனாகிய பவுல், ரோமாபுரிக்கு எழுதுகையில் "..... இரட்சிப்பு உண்டாவதற்கு, அது (சுவிசேஷம்) தேவபெலனாயிருக்கிறது, "(1::16) என்கிறார். ஒருவேளை இன்று பலர் தங்களை ஞானிகள் என்று எண்ணி, "என்றோ ஒரு மரத்தில் தொங்கினவர் இன்றைக்கு எப்படி நம்மை இரட்சிப்பார், இது பைத்தியமாக தோன்றுகிறது" என்பார்கள். ஆனால் சர்வ ஞானத்தையும் கொண்ட தேவன் இதற்கு பவுலைக் கொண்டு பதில் தருகிறார். "..... பைத்தியமாகத் தோன்றுகிற பிரசங்கத்தினாலே விசுவாசிகளை இரட்சிக்க தேவனுக்குப் பிரியமாயிற்று" (I கொரி. 1:21). மேலும் பவுல், தனது பிரசங்கம் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பற்றியதாகவே இருக்கும் என்கிறார் (I கொரி 1:23). வாலிப உள்ளங்களே! ஆதி அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவின் சிலுவையையே மையமாக வைத்துப் பிரசங்கம் செய்திருக்கிறார்கள். ஆகையால் அதே மாதிரியைப் பின்பற்றி கிறிஸ்துவின் சிலுவையை நாமும் உயர்த்திப் பிடிப்போம், நமது ஆண்டவர் நான் உயர்த்தப்படும்போது அநேகரை என்னண்டையில் இழுத்துக் கொள்வேன் என்றாரே அவர் உலகின் மையச் சீமையான எருசலேமில் சிலுவையில் உயர்த்தப்பட்ட அந்த காட்சிகளைநம்முடையபோதனையின் மையமாகக் கொள்வோம்.

வாலிபர்களே! இந்திய தேசத்திலுள்ள கோடிக்கணக்கான ஜனங்களுக்கு, "இயேசுவாலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான் "(அப்.4:12) என்ற உண்மையினை நாம் தைரியமாக அறைகூவல் விடுக்க வேண்டும். இந்திய தேசத்திற்கு இன்று தேவைப்படுவது எல்லாம் முதல் நூற்றாண்டு கிறிஸ்துவின் சீஷர்களுடைய வல்லமையான பிரசங்கங்கள்தான். அன்று சிதறி திரிந்தவர்கள் எங்கும் போய் சுவிசேஷ ஒளி வீசினார்களே! அதுபோல இளைஞர்கள் கிறிஸ்துவுக்காய் போர்படையென புறப்பட வேண்டிய நிலைதான் இன்னும் இந்திய தேசத்திலிருக்கிறது.

வாலிபர்களே! நீங்கள் நம்முடைய இந்திய மண்ணில் ஆத்துமாக்கள் நாசத்தின் பாதையில் போவதை வெறுமனே நின்று பார்க்காமல்! தேவ சேனைக்கான அணிகலன்களை பூண்டு, ஆவியின் பட்டயத்தை கையில் உயர்த்திப் பிடித்து உடனடியாகப் புறப்படுதல் சாலச் சிறந்தது. இன்றைக்கும் இந்திய கிரா-

மங்கள், முதல் நூற்றாண்டு பாலஸ்தீனத்திலிருந்து வெகுவாக மாறிவிடவில்லை. சமாரியா நாட்டின் சீகார் ஊரில் அன்றைக்கு சமுதாயத்தால் ஏற்றுக் கொள்ளப்படாத பெண், மக்கதொனிய சூரியக் கதிர்கள் சுட்டெரிக்கும் மதிய வேளையில் தண்ணீர் மொள்ளும்படி வந்த யாக்கோபின் துரவுகள் போன்ற கிணறுகள் இன்றும் இந்தியாவின் அநேக கிராமங்களில் காணப்படுகிறது. அன்றைக்கு எப்படிக் கிறிஸ்து சென்று அந்தப் பெண்ணிடம் ஆவிக்குரிய உரையாடல் செய்தாரோ அதே போல இன்றைக்கும் கிறிஸ்துவின் சுவிசேஷம் சமுதாயத்தில் ஜாதி, குலம், நிறம், தொழில், செல்வம் என்ற காரணங்களால் ஒதுக்கப்பட்டவர்களிடம் கரிசனையுடன் எடுத்துச் செல்ல வேண்டிய கடமை நம்மேல் அதிகமாக இருக்கிறது.

அப்போஸ்தலனாகிய, பவுல் அன்றைக்கு உலக ஞானிகள் என்று பெயர்பெற்ற அநேகரைக் கொண்ட அத்தேனே பட்டணத்தில் எப்படி சுவிசேஷத்தை முழங்கினாரோ அதைக் கொஞ்சமும் மாற்றாமல் இன்றைக்கும் இந்தியாவில் பிரசங்கிக்க வேண்டிய கட்டாயத்தை இளைஞர்களாகிய நாம் உணர வேண்டியதவசியம். ".... நீங்கள் மிகுந்த தேவதர பக்தியுள்ளவர்களென்று காண்கிறேன்.... உங்கள் ஆராதனைக்குரியவைகளைக் கவனித்துப் பார்த்தபொழுது **அறியப்படாத தேவனுக்கு** என்று எழுதியிருக்கிற ஒரு பலிபீடத்தைக் கண்டேன். நாம் தேவனுடைய சந்ததியராயிருக்க மனுஷருடைய சித்திரவேலையினாலும் புத்தியினாலும் உருவாக்கின பொன், வெள்ளி, கல் இவைகளுக்கு தெய்வம் ஒப்பாயிருக்குமென்று நாம் நினைக்கலாகாது" (அப்.17:23,29) என்று பவுல் அன்றைக்கு உலக ஞானிகளுக்கு, தேவ ஞானத்தை வெளிப்படுத்தினாரே அதைப்போல வாலிபர்களாகிய நாம் வலிமைமிகு இப்பருவத்திலேயே இதைச் செய்ய வேண்டும்.

முதல் நூற்றாண்டில் அத்தேனே பட்டணத்துச் சூழ்நிலை இன்றைக்கு இருக்கும் இந்தியாவில் பெரிதும் வேறுபட்டுவிடவில்லை, அதே போன்ற மக்கள் தான் இங்கும் வாழ்கிறார்கள். அத்தேனே பட்டணத்தார் பவுலுக்கு மறுமொழியாக கூறின காரியத்தைக் கவனியுங்கள். "மரித்தோரின் உயிர்த்தெழுதலைக் குறித்து அவர்கள் கேட்டபொழுது சிலர் **இகழ்ந்தார்கள்,** சிலர், நீ சொல்லுகிறதை இன்னொருவேளை கேட்போம் என்றார்கள்— சிலர் அவனைப் பற்றிக் கொண்டு, விசுவாசிகளானார்கள்" (அப்.17:32-34). வாலிபர்களே! இன்றும் இப்படித்தான் நம்மைக் கேட்கிறவர்கள் நமக்கு மறுமொழி கொடுப்பார்கள். ஆனால் அன்றைக்கு பவுலை "பற்றிக் கொண்ட சிலரைப்" போல், இன்றைக்கும் உண்மை உள்ளமுடையோர் நம்மை தேவ பணி செய்ய ஊக்கப்படுத்துவார்கள். அவர்களுக்காகக் கர்த்தரை துதித்து, இன்னும் சிருஷ்டிப்பிலே சிருஷ்டிகரைத் தேடி அலைந்து கொண்டிருக்கும் இந்தியாவுக்கு, அறியப்படாத தேவனை நாம் வெளிப்படுத்துவோம்.

எனக்கு அருமையான வாலிபர்களே! போதனை என்னும் கல் சுமந்து, சுவிசேஷம் என்னும் தேவ அன்பை அநேக ஆத்துமாகளுக்கு அறிவிப்போம். வாலிபர்களாகிய நம் மூலமாக கிறிஸ்துவின் குரல் எங்கும் ஒலிக்கட்டும், அதுவும் இந்த இந்திய தேசத்தில் அதிகமாய் ஒலிக்கட்டும், வானத்திலிருந்து பிரதான தூதன் எக்காளம் முழங்கும்முன், கிறிஸ்து நியாயாதிபதியாக வெளிப்படும் முன், அவரை நாம் இரட்சராக வெளிப்படுத்தி, அவரின் அன்பின் குரலை எங்கும் ஒலிக்கச் செய்வோம். ஆமென்!

**ஜே. பிக்கின்ஸ்**

# நெகேமியா ஒரு கண்ணோட்டம்

**I காலம் :** ஏறக்குறைய கி.மு. 444

**II ஆசிரியர் :** நெகேமியா என்று பெரும்பாலும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது (1:1)

## இந்நூல் பற்றி

a) நெகேமியா என்பதற்கு யெகோவாவின் ஆறுதல் என்று பொருள்படும்.

b) எஸ்றாவிக்கு 13 வருடங்களுக்கு பின் நெகேமியா எருசலேமில் தன் பணியை துவக்கினார்.

c) நெகேமியா இருமுறை யூதாவின் ஆளுநராகயிருந்திருக்கிறார்.
   1) முதல் முறை 445 கி.மு.
   2) இரண்டாம் முறை 433 கி.மு.

d) வரலாற்று அறிஞர்கள் இந்நூலில் கொடுக்கப்பட்ட வரலாற்றுச் செய்திகள் அனைத்தும் உண்மையாக இருக்கிறது என்று கூறுகிறார்கள்.

e) எஸ்றா மக்களின் மனதைக் கட்டினான், நெகேமியா எருசலேமின் அலங்கத்தைக் கட்டினான்.

f) நெகேமியா பெர்சிய அரசனாகிய அர்த்தசாஸ்திராவின் பானபாத்திரகாரனாக இருந்தான் (நெ. 1:11-2:1)

g) எஸ்றா ஒரு வேத பாரகனாக இருந்தான், ஆனால் நெகேமியாவோ ஒரு சாமானியனாக இருந்திருக்கிறான்.

## இந்நூலின் செய்தி

1) தேவன் தனது வாக்குதத்தத்தை நிறைவேற்ற உண்மையுள்ளவராகயிருக்கிறார்.

2) தேவ ஜனங்கள் அவரைப் போலவே பரிசுத்தமாக இருப்பது அவர்களது கடமை.

3) மீட்டமைத்தல் என்பது ஒரு தொடர்ச்சியான செயல், அதில் ஜெபமும், தேவபணியும் மிக முக்கியமானதாக இருக்கிறது.

# தைரியம் நிறைந்த மோசேயின் பெற்றோர்



அருமையான சின்னத் தம்பி, தங்கைகளே! சிறுபிள்ளைகளை மிகவும் நேசித்த நமது ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் உங்களை வாழ்த்துகிறேன். இவ்விதழ் மூலமாக மீண்டும் உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். இம்முறை, இஸ்ரவேல் ஜனங்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து தேவனின் துணையுடன் விடுதலை செய்து வழிநடத்திய மோசேயின் சிறுபிராயத்தைக் குறித்து சிறிது சிந்திப்போம் வாருங்கள்!

யோசேப்பின் மரணத்திற்குப் பின் "யோசேப்பை அறியாத புதிய ராஜன் ஒருவன் எகிப்திலே தோன்றினான்" (யாத் 1:8). அவன் எபிரேயர்களுக்கு (இஸ்ரவேலர்களுக்கு) நன்மை செய்ய விருப்பமில்லாதவனாக இருந்தான். தன் நாட்டில் அதிகமான எபிரேயர்கள் இருந்ததினால், ராஜாவாகிய பார்வோன், தன் நாட்டை அவர்கள் மேற்கொண்டுவிடுவார்களோ என்று பயந்தான். (யாத் 12:37ல் 6,00,000 எபிரேய புருஷர்கள் (பெண்களையும், சிறியவர்களையும் சேர்க்காமல்) இருந்தார்கள் என்று கூறுகிறது. ஆனால் பார்வோனோ அவர்கள் எல்லோரும் தனக்கு அடிமைகளாக வேண்டும் என்று தீர்மானித்தான். பின்னர், அவர்களாகவே செங்கற்களை செய்து முழுபட்டணத்தையும் கட்டும்படி அவர்கள் மீது விசாரணைக்காரர்களை ஏற்படுத்தினான்.

எபிரேயர்களை, அதிகம் துன்புறுத்தி, கடும் வேலைகளை கொடுத்தால் அவர்களுக்கு குறைந்த குழந்தைகளே இருப்பார்கள், அப்படி இருப்பவர்களும் எளிதாக இறப்பார்கள் என எகிப்தியர்கள் நினைத்தார்கள். ஆனால், இன்னும் அதிக எபிரேய குழந்தைகள் பிறந்து கொண்டு தான் இருந்தது. அடுத்ததாக, பார்வோன் மருத்துவச்சிகளுக்கு, புதிதாக பிறக்கும் எல்லா எபிரேய ஆண்பிள்ளைகளை கொல்ல உத்தரவிட்டான். ஆனால் மருத்துவச்சிகள் பார்வோனின் வார்த்தைகளை கேட்கவில்லை. ஏனென்றால் ஒன்றும் அறியாத அக்குழந்தைகளை கொல்வது தவறு என்று அறிந்திருந்தனர். பார்வோன், இக்காரியத்தை அறிந்த பொழுது, எல்லா எபிரேய ஆண்பிள்ளைகளையும் நைல் நதியில் வீசி எறியுமாறு எகிப்து மக்களுக்கு கட்டளை இட்டான்.

இப்படிப்பட்ட காலத்தில், யோசபாத், அம்ராம் என்ற பேருள்ள

எபிரேய தம்பதியினர் தங்கள் குழந்தையை கொல்லுவதிலிருந்து தப்ப அவர்கள் முயற்சித்தார்கள். அவர்களுக்கு ஏற்கனவே 14 வயதான பெண் பிள்ளையும் (மிரியாம்) மற்றும் ஒரு மகனும் (3 வயதான ஆரோன்) இருந்தார்கள். ஆனாலும் இக்குழந்தை அவர்களுக்கு விஷேசமான ஒன்றாக இருந்தது. அதினால் அவர்கள் ஏதாவது செய்ய வேண்டும் என உணர்ந்தார்கள். மூன்று மாதம் வரை, அந்த சிறுபையனை அவர்கள் மறைத்து வைத்தார்கள், ஆனால் அதற்கு மேல் அவர்கள் வேறு காரியம் செய்ய வேண்டும் என அறிந்தார்கள்.

அவர்கள் ஒரு கூடையை உண்டுபண்ணி, அதன் மூடியை பாப்பிரஸ் செடியின் குச்சிகளை கொண்டு செய்து, பிசினும், கீலும் பூசி, அதை தண்ணீர் புகாமல் செய்தார்கள். அதில் அச்சிறுவனை வைத்து ஆற்றின் பெரிய செடிகளுக்கு இடையே மறைத்து வைத்தார்கள் அச்சிறுவனின் அக்காவான மிரியாம் தூரத்திலே நின்று அக்கூடையை பார்த்து எந்தவித மோசமானதும் ஏற்படாமல் இருக்க, கண்காணிக்கும் வேலையைப் பார்த்தாள்.

வேதாகமம், எவ்வளவு காலம் மறைத்து வைத்தார்கள் என்று நமக்குக் குறிப்பிடவில்லை. ஆனால் ஒரு நாளில் எகிப்து நாட்டைச் சேர்ந்த பெண் ஒருவர் அதை கண்டாளென்று கூறுகிறது. அப்பெண்மணி பார்வோனின் மகள்தான். இளவரசி குளிக்க தன் வேலைகாரிகளோடே நதிக்குச் சென்றாள். அந்த கூடையை கண்டவுடன் ஒரு வேலைக்காரியை போய் எடுத்துவரச் சொன்னாள். அவள் அக்கூடையின் மூடியை திறந்தவுடன் அக்குழந்தையைக் கண்டு, அது ஒரு எபிரேய குழந்தை என்றுணர்ந்து அக்குழந்தையை காப்பாற்ற அதை சொந்த குழந்தையைப் போல் ஏற்றுக் கொண்டாள். மிரியாம் இவை நடந்ததைக் காணக் கூடிய தூரத்திலே இருந்தாள், ஆகையால் என்ன நடந்தது என்பதையும் கண்டாள்.

அவள் (மிரியாம்) இளவரசியிடம் சென்று அவளை நோக்கி, இக்குழந்தையை பராமரிக்க, அவளு-க்கு தெரிந்த ஒரு பெண் இருக்கிறாள் என்றாள். அப்பெண்மணி மோசேயின் அம்மாவான யோசபாத்தை அழைத்து வந்தாள். இளவரசி அதற்கு ஒத்துக்-கொண்டாள், யோசபாத் ஒரு எபிரேய அடிமைப்பெண், அவளது மகனையே அவள் இளவரசியின் பாதுகாப்பின் கீழ் பார்த்துக் கொள்ள முடிந்தது. இளவரசி அவனுக்கு மோசே என்று பேரிட்டாள். மோசே என்பதற்கு ஜலத்திலிருந்து எடுக்கப்பட்டவன் என்று அர்த்தம். சிறிது காலம் சென்ற பின்பு (ஏறக்குறைய 7 வயதுக்கு முன்னாள்) யோசபாத் தன் மகனாகிய மோசேயை அரண்-மனையிலுள்ள பார்வேனின் மகளிடம் எடுத்துச் சென்றாள். அந்த நேரத்தி-லிருந்து, இளவரசி மோசேயை உலகின் பெரிய சாம்-ராஜ்யத்தின் அரசனுடைய பேரன் என்ற நிலைக்கு உயர்த்தினாள்.

யோசபாத்தும் அம்ராமும் அவர்கள் குழந்தைகளுக்கு எந்த-வித பொருளையோ அல்லது படிப்பறிவையோ பெற்றுத்தர அவர்களால் முடியாதிருந்தது. ஆனால் அவர்கள் தங்கள் குழந்தைகளுக்கு என்ன செய்ய முடியுமோ அதைச் செய்தார்கள்: உண்மையான ஒரே தேவன் மீதும், அவர் இஸ்ரவேலுக்கு கொடுத்த வாக்குத்தத்தத்தின் மீதும் விசுவாசத்தை வளர்த்தார்கள். மோசே அன்றைய நாட்களில் எகிப்தின் உயர்ந்த கல்வியைப் பெற்றிருந்த போதிலும் (அப். 7:22), அவன் தன் பெற்றோர்கள் தேவனைப் பற்றிக் கற்றுத்தந்த முந்திய போதனையை நினைவு கூர்ந்து, "வார்த்தையிலும், செயலிலும் வல்லவனானான்". அவன் 40 வயதாகும் போது எகிப்தின் எல்லாச் சுகங்களையும் விட்டுவிட்டு, விடுதலைப் பெற்ற லட்சக்கணக்கானவர்களை வழிநடத்தினான். இந்த மாற்றத்தை உண்டாக்கியது எது? அவன் இளவயதாயிருக்கும் போது அவன் பெற்றோர் கொடுத்த சுயநலமற்ற அன்பும் போதனையுமே. மோசே இந்த போதனைக்கு திரும்பின போது, அவன் தேவனையும், தன் பெற்றோரையும் கனம் செய்து, தன்னால் கூடுமான மட்டும், ஒரு நல்ல தலைவனாகயிருந்தான். மோசேயின் பெற்றோரைக் குறித்து நமக்கு வேறொன்றும் தெரியவில்லை என்றாலும் தேவன் மீதான அவர்களது அன்பும், விசுவாசமும் தங்களது மகனின் மகத்தான வாழ்க்கை முழுவதும் தொடர்ந்து வாழ்ந்தது.

**தமிழில் - எபில் ரோஜர் நாயகம்**

# அந்திரேயாவைப் பற்றி

பன்னிரெண்டு அப்போஸ்தலர்களில் ஒருவன் கிரேக்கத்தில் இப்பெயருக்கு 'புருஷனானவன்' என்று பொருள் உண்டு. யோனாவின் குமாரனும், பெத்சாயிதா என்னும் பட்டணத்தானாகவும் இவன் இருந்தான். இவன் பிற்காலத்தில் தன் சகோதரனுடன் கப்பர்நகூமுக்குப் போய் அங்கே குடியிருந்தான் (மாற்கு 1:20). அங்கே அவர்கள் மீன்பிடி தொழிலை கூட்டாகச் செய்தார்கள் (மத் 4:18). யோவான் ஸ்நானகனின் சீஷனாக இவன் இருந்திருக்கிறான் (யோ 1:35-40). இவனிடம் தான் யோவான், "இதோ தேவ ஆட்டுக்குட்டி" என்று இயேசுவை காண்பித்தான். இவன் பின்பு தன் சகோதரனாகிய சீமோனை இயேசுவிடம் அழைத்து வந்தான் (யோ 1:42). இவனுடைய நடைமுறை விசுவாசம் யோவான். 6:8,9லும், 12:21,22லும் காண்பிக்கப்பட்டிருக்கிறது. எருசலேமின் மீது வரும் அழிவைக் குறித்து இவன் வினவினான். (மாற்கு 13:3,4). உலக சரித்திரம் இவன் அகாயாவிலே சிலுவையில் அறையப்பட்டு இரத்தசாட்சியாக மரித்திருப்பான் எனக் கூறுகிறது.

# வெளிப்படுத்தின விசேஷம்

## அதிகாரம் 15: 1-16 :11

**ப**தினைந்தாம் அதிகாரமானது, வெளிப்படுத்தல் நூலின் மிகக் குறுகிய அதிகாரமாகும். இந்த அதிகாரம், வானத்திலே பெரிதும் ஆச்சரியமுமான வேறொரு அடையாளமாகிய கடைசியான ஏழு வாதைகளையுடைய, ஏழு தூதரை யோவான், காண்பதிலிருந்து ஆரம்பமாகிறது. அந்த ஏழு வாதைகளில், தேவனுடைய கோபம் முடிகிறது. பதினாறாம் அதிகாரத்தில் தேவனுடைய கோபம்; அந்த ஏழு வாதைகளினாலே ஊற்றப்படுகிறது. வெளி: 15:2ல்," அக்கினி கலந்த கண்ணாடிக் கடல் போன்ற ஒரு கடலை" யோவான் கண்டான். நான்காம் அதிகாரத்தின் ஆறாம் வசனத்தில், பரலோகத்தில் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக " பளிங்குக்கொப்பான கண்ணாடிக் கடலை" யோவான் கண்டான். இப்பொழுது, 15 -ம் அதிகாரம் இரண்டாம் வசனத்தில் யோவான் மிருகத்திற்கும், அதின் சொரூபத்திற்கும், அதின் முத்திரைக்கும் அதின் நாமத்தின் இலக்-கத்திற்கும் உள்ளாகாமல் ஜெயங்கொண்டவர்கள், தேவ சுரமண்டலங்களைப் பிடித்துக் கொண்டு, அந்தக் கண்ணாடிக் கடலருகே. நிற்கிறதைக் காண்கிறான். இவர்கள். வெளி 14:1-5 வசனங்களில் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக, தங்களுடைய சுரமண்டலங்களைக் கொண்டு புதுப்பாட்டைப் பாடின, மீட்கப்பட்டவர்களாகிய அதே 1,44,000 பேர் தான் (பரலோகத்தில் சுரமண்டலங்கள் பற்றி சொல்லப்பட்டிருப்பதானது. எந்த விதத்திலும், பூமியிலே கிறிஸ்தவர்கள் தேவனை ஆராதிக்கும் போது, இசைக்கருவிகளைப் பயன்படுத்தலாமென்பதற்கு அங்கீகாரமாகாது.) வெளிப்படுத்தலின் ஆரம்பத்திலிருந்து, பாவத்தின் மீது ஜெயங்கொள்ளுவதின் அவசியம் தொடர்ந்து வலியுறுத்தப்படுகிறது. (வெளி:2:7,11,17,26; 3: 5,12,21,12:11, 17:14; 21:7) இரண்டாம் வசனத்தில் மீண்டும் இங்கு வலியுறுத்தப்படுவதை நாம் காண்கிறோம்.

ஜெயங்கொண்டவர்கள் பரலோகத்தில் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக நின்று கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மிருகத்தையும், அதின் சொரூபத்தையும், அதின் முத்திரையையும் அதின் நாமத்தின் இலக்-கத்தையும் வெற்றி கண்டவர்கள் இது மிருகத்தையும். அதின் சொரூபத்தையும் அதின் அடையாளத்தையும் பெற்றுக் கொண்டு வணங்கியவர்களுக்கு மாறாக உள்ளது. அவர்கள் தேவனுடைய உக்கிரமாகிய மதுவைக் குடித்து நித்திய வாதையிலே பங்கடைவார்கள். (வெளி 14:8-11)தேவனுடைய கோபாக்கினையென்னும் பெரிய ஆலையில் மிதிக்கப்பட்ட போது ஆயிரத்தறுநூறு ஸ்தாதி தூரத்திற்கு புறப்பட்டுக் குதிரைகளின் கடிவாளம் மட்டும் பெருகி வந்த இரத்தம் இவர்களுடையதுதான் (வெளி 14:14:20) வெளிப்படுத்தல் பதினாறாம் அதிகாரத்தில் உள்ள கடைசி ஏழு வாதைகளில் பங்குபெற்றவர்கள் இவர்கள்தான். ஆகவே 15 முதல் 16 வரை உள்ள அதிகாரங்கள் தேவனுடைய உண்மையுள்ள ஊழியக்காரார்கள் மீதான சாத்தானுடைய தாக்குதலையும்,

அவர்களின் முடிவான வெற்றி மற்றும் அதற்குரிய பரலோக பலனையும், இன்னும் சாத்தனையும், அவனுடைய தந்திர வழிகளையும் ஜெயங்கொள்ளாதவர்களுக்கான நித்திய அழிவைப் பற்றியும் கூறுகிறது. (மிருகமும் அதின் சொரூபம் போன்றவைகளும் இதில் அடக்கம்)

வெளி: 14:2-3 வசனங்கள், தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக பாடப்படும் பாடலை மீட்கப்பட்டவர்கள் மாத்திரம் கற்றுக் கொள்ள முடியும் என்று சொல்லுகிறது. வெளி 15:3 ல் தேவனுடைய ஜெயங்கொண்ட ஊழியர்கள், "தேவனுடைய ஊழியக்காரனாகிய மோசேயின் பாட்டையும், ஆட்டுக் குட்டியானவரின் பாட்டையும் பாடி, சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தாவே, தேவரீருடைய கிரியைகள் மகத்துவமும் ஆச்சரியமுமானவைகள்; பரிசுத்தவான்களின் ராஜாவே தேவரீருடைய வழிகள் நீதியும் சத்தியமுமானவைகள் :" என்று சொல்லுவார்கள் என்றுள்ளது. மோசேயின் பாட்டும், ஆட்டுக் குட்டியானவரின் பாட்டும் "புதுப்பாடலோ" அல்லது இல்லையே ஒன்று நன்றாகத் தெரிகிறது. அது நித்திய இரட்சிப்பைப் பெற்றவர்கள் மாத்திரமே. அவருடைய சிங்காசனத்திற்கு முன்பாக அவருடைய சமூகத்தில், தேவனை நோக்கி அந்தப்பாடலைப் பாடும் சிலாக்கியம் பெறுவர். பரிசுத்தவான்கள் தேவனை, அவருடைய பெரிதும் மகத்துவமுமான கிரியை-களுக்காவும், உண்மையும், நீதியுமான வழிகளுக்காகவும் அவரைத் துதிப்பார்கள். அவர், பரிசுத்தவான்களின் ராஜாவாயிருக்கிறார்.

வசனம் 4-ல் , கர்த்தாவே, யார் உமக்குப் பயப்படாமலும், உமது நாமத்தை மகிமைப்படுத்தாமலும் இருக்கலாம்? என்று பரிசுத்தவான்கள் கேட்கிறார்கள். இதன் பொருள் யாதெனில் எல்லா மனிதரும் தேவனுக்குப் பயந்து அவரை மகிமைப்படுத்த வேண்டுமென்பது தான் (பிர: 12.13. : அப் 10.34-35: ரோம 1:18-25) எல்லா மனிதரும் இப்படிச் செய்ய வேண்டுமென்பதற்கான ஒரு காரணம் தேவன் சிருஷ்டிகர் என்பது. (வெளி 4:11; 14:6-7) தேவனுடைய பரிசுத்த தன்மை மற்றொரு காரணம் (15.4) இந்த வசனம், அவர் ஒருவரே பரிசுத்தர் என்று சொல்லுகிறது.

அவர் ஒருவரே பரிசுத்தர் என்று சொல்லப்படுவதோடு அவர் ஒருவரே ஞானமுள்ளவராயிருக்கிறார்.(ரோம 16:27; I தீமோ 1:17: யூதா..25) அத்தோடு அவர் ஒருவரே நல்லவராயுமிருக்கிறார். (மத் : 19: 16-17) இப்படிச் சொல்லப்பட்டிருப்பது நாம் பரிசுத்தத்தையும், நன்மை செய்வதையும், ஞானத்தையும் அடைய முடியாதென்பதல்ல. நம்மாலும் முடியும். உண்மையில் நாம் நன்மை செய்யபவர்களாக , (மத் 25: 21 : 23 லூக் 23:50, அப்: 11:24) பரிசுத்தமுள்ளவர்களாக (மத் 6:20: 1 பேது 1:15- 16) ஞானமுள்ளவர்களாக, (யாக் 1:5) மாற வேண்டும். ஆகையால் தேவனைப் பற்றிச் சொல்லும்போது, இவைகளின் இருப்பிடமாக அவர் இருக்கிறார் என்பது தெரிய வேண்டும். நன்மையாக எந்த ஈவும் பரலோ-கத்திலுள்ள பிதாவினிடத்திலிருந்து வருகிறது. (யாக் 1:17) நம்முடைய

முயற்சியினாலேயே நாம் பரிசுத்தத்தையும், நன்மையையும் ஞானத்தையும் பெற்றுக் கொள்ள முடியாது (யோ:15:5) தேவன் ஒருவரே அதற்குக் காரணராகவும் பரிசுத்தம், நன்மை, ஞானம் இவைகளுக்கு மாதிரியாகவும் இருக்கிறார். தேவனுடைய வார்த்தையிலிருந்து தேவன் எப்படிப்பட்டவராயிருக்கிறார் என்று அறிந்து அதினடிப்படையில் நாம் அவரைப் போலாக வேண்டும்.

மோசேயின் பாட்டும், ஆட்டுக்குட்டியானவரின் பாட்டும், தேவனுடைய நியாயத்தீர்ப்பின் வருகையை முன் கூட்டியே அறிவிக்க ஆரம்பமானது. " எல்லா ஜாதிகளும் வந்து உமக்கு முன்பாகத் தொழுது கொள்ளுவார்கள். உம்முடைய நீதியான செயல்கள் வெளியரங்கமாயின என்றார்கள். (15:4) பரிசுத்தவான்கள் அந்த வார்த்தைகளைப் பாடியதைக் கேட்ட பிறகு, யோவான் பரலோகத்தில், சாட்சியின் கூடாரமாகிய ஆலயம் திறக்கப்பட்டதைக் கண்டான். (வெளி 15:5) இது பழைய ஏற்பாட்டுக் காலத்தில் ஆசரிப்புக் கூடாரத்திற்குள்ளாக, உடன்படிக்கைப் பெட்டியைக் கொண்டிருந்த மகா பரிசுத்த ஸ்தலத்திற்கு அடையாளமாகத் தோன்றுகிறது. இதைப் போன்றதொரு விவரிப்பு வெளி 11:14-19 வசனப்பகுதியில் உள்ளது. அங்கே ஏழாம் முத்திரையின் மூன்றாவது மற்றும் இறுதி ஆபத்தின் போது ஆலயம் திறக்கப்படுவதும், உடன்படிக்கைப் பெட்டி காணப்படுவதும், தேவனுடைய கோபம் ஊற்றப்படுவதோடு சம்பந்தப்படுத்தப்பட்டுள்ளது. (பழைய ஏற்பாட்டில் அடிக்கடி இவ்விதம் உள்ளது) இங்கே 15ம் அதிகாரத்திலும் அது உண்மையாக உள்ளது. ஆலயம் திறக்கப்பட்ட போது,

" அந்த ஆலயத்திலிருந்து ஏழு வாதைகளையுடைய அவ்வேழு தூதர்களும் சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரந்தரித்து மார்பருகே பொற்கச்சைகளைக் கட்டிக் கொண்டு புறப்பட்டார்கள்". வெளி 15:6 இந்தத் தூதர்கள் தேவனுடைய நியாயத்தீர்ப்பை வெளிப்படுத்துவதற்காக வந்தவர்கள்.

அடுத்து ஏழாம் வசனத்தில், "அப்பொழுது அந்த நான்கு ஜீவன்களில் ஒன்று, சதா காலங்களிலும் உயிரோடிருக்கிற தேவனுடைய கோபாக்கினையால் நிறைந்த பொற்கலசங்கள் ஏழையும் அந்த ஏழு தூதர்களுக்கு கொடுத்தது", இது, இந்த ஏழு பொற்கலசங்களிலும் இருந்த கோபாக்கினைக்கு நித்திய தேவனானவரே காரணம் என்று தெளிவாக்குகிறது. தேவ கோபாக்கினை நிறைந்த பொற்கலசங்களை ஒவ்வொரு தூதரும் பெற்றுக் கொண்ட பிறகு."தேவனுடைய மகிமையினாலும்," அவருடைய வல்லமையினாலும் உண்டான புகையினாலே தேவாலயம் நிறைந்தது. ஏழு தூதர்களுடைய ஏழு வாதைகளும் முடியும் வரைக்கும் ஒருவரும் தேவாலயத்திற்குள் பிரவேசிக்கக் கூடாதிருந்தது," (15:8)

வெளிப்படுத்தல் 16-ம் அதிகாரம் தேவாலயத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தம் அந்த ஏழு தூதருடனே நீங்கள் போய்த் தேவனுடைய கோப கலசங்களைப் பூமியின் மேல் ஊற்றுங்கள் என்று சொல்லுவதை, யோவான் கேட்பதிலிருந்து ஆரம்பமாகிறது. இரண்டாம் வசனத்தில்,"முதலாம் தூதன் போய் தன் கலசத்திலுள்ளதைப் பூமியின் மேல் ஊற்றினான் ; உடனே

மிருகத்தின் முத்திரையைத் தரித்தவர்களுக்கும், அதின் சொரூபத்தை வணங்குகிறவர்களுமாகிய மனுஷர்களுக்கும் பொல்லாத கொடிய புண்ணுண்டாயிற்று (16:2) மிருகத்தின் அடையாளத்தையும், அதன் சொரூபத்தை வணங்கியவர்கள்தான், தேவனுடைய கோபாக்கினைக்குக் காரணமாகிறார்கள் என்பதை நாம் முதலாவது பார்க்கிறோம். (அதிகாரம் 13 - ஐப் பார்க்கவும்) இவர்கள்தான் ஓய்வில்லாமல் நித்தியகாலமாக இரவும், பகலும் வாதிக்கப்படுவார்கள். (வெளி 14:9-11) அவர்கள் முதலாவது, பொல்லாத கொடிய புண்களால் துன்புறுத்தப்படுவார்கள். இது மோசேயின் காலத்தில் தேவன் எகிப்தியர் மீது கொண்டுவந்த எரிகொப்பள வாதையாகிய ஏழாம் வாதையை நினைவுபடுத்துகிறது. (யாத் 9:8-12)

மூன்றாம் வசனத்தில் இரண்டாம் தூதன் தன் கலசத்திலுள்ளதைச் சமுத்திரத்திலே ஊற்றினான். உடனே அது செத்தவனுடைய இரத்தம் போலாயிற்று, சமுத்திரத்திலுள்ள பிராணிகள் யாவும் மாண்டு போயின (16:3) வசனம் (16:4) ல் மூன்றாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை ஆறுகளிலும், நீரூற்றுகளிலும் ஊற்றினான். உடனே அவைகள் இரத்தமாக மாறின. இந்த இரண்டு வாதைகளும், மோசேயின் நாட்களில் தேவன் எகிப்தியர் மீது கொண்டு வந்த முதலாவது வாதையை நினைவுபடுத்துகிறது. (யாத் 7:14 - 25) கடைசி ஏழு வாதைகளின், முதல் மூன்றிற்குப் பிறகு இந்தத் தண்டனைகள் நியாயமா அல்லது இல்லையா என்று ஒருவன் கேள்வி எழுப்பலாம். அப்படிப்பட்ட கேள்விக்கு வசனம் 5-ல் பதிலளிக்கப்பட்டுள்ளது. "அப்பொழுது தண்ணீர்களின் தூதன் இருக்கிறவரும் இருந்தவரும் பரிசுத்தருமாகிய தேவரீர் இப்படி நியாயந்தீர்க்க நீதியுள்ளவராயிருக்கிறீர்". என்று சொல்ல யோவான் கேட்டான். தேவனுடைய நித்தியத்தன்மை இங்கேவிவரிக்கப்பட்டுள்ளது. அத்தோடு துன்மார்க்கர் மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு நீதியானதென்று வலியுறுத்தப்பட்டுள்ளது. வசனம் 6-ல் இவர்கள் பரிசுத்தவான்கள், தீர்க்கத்தரிசிகள் இவர்களுடைய இரத்தத்தைச் சிந்தினபடியால், இவர்களின் தண்ணீர் இரத்தமாக்கப்படுவதற்குத் தகுதியானவர்களாக இருக்கிறார்கள் என்று காண்கிறோம். வெளிப்படுத்தல் 13:14-ல் இரண்டாம் மிருகம் (கள்ளத்தீர்க்கதரிசி) முதலாம் மிருகத்தைப் போன்றதொரு சொரூபத்தை பண்ண வேண்டுமென்று பூமியின் குடிகளுக்குச் சொல்லிற்று. வசனம் 13.15 ல் அந்த சொரூபம், அந்த சொரூபத்தை வணங்காத யாவரையும் கொலை செய்யும்படி செய்தது. வெளிப்படுத்தல் 16:6 லிருந்து சொரூதபத்தை வணங்கியவர்கள்தான் தேவனுடைய உண்மையுள்ள பரிசுத்தவான்களின் இரத்தத்தைச் சிந்தியவர்களென்று தெளிவாகிறது. இப்பொழுது தேவன், அவர்கள் இரத்தத்தைக் குடிக்கும்படி கொடுத்தார். மனிதன் எதை விதைக்கிறானோ அதை அறுப்பான் என்ற கருத்தை இது விளக்குகிறது. (கலா: 6:7) வெளி 13:10) 16:7-ல் "பலிபீடத்திலிருந்து வேறொருவன்" ஆம் சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தாவே உம்முடைய நியாயத்தீர்ப்புகள் சத்தியமும் நீதியுமானவைகள் என்று சொல்ல" யோவான் கேட்டான். வெளி 16:5-7ல் துன்மார்க்கர் மீதான தேவனுடைய நீதியான தண்டனை உறுதியாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

வெளி 16: 8-9 " நான்காம் தூதன் தன் கலசத்திலுள்ளதைச் சூரியன் மேல் ஊற்றினான், தீயினால் மனுஷரைத் தகிக்கும்படி அதற்கு அதிகாரங் கொடுக்கப்பட்டது. அப்பொழுது மனுஷர்கள் மிகுந்த உஷ்ணத்தினாலே தகிக்கப்பட்டு, இந்த வாதைகளைச் செய்ய அதிகாரமுள்ள தேவனுடைய நாமத்தைத் தூஷித்தார்களேயல்லாமல் அவரை மகிமைப்படுத்த மனந்திரும்பவில்லை, வசனங்கள் 2-9ல் உள்ள எல்லாத் தண்ணீர்களையும் சூரியனையும் பாதிக்கும் அளவிலான முதல் நான்கு வாதைகளின் ஒட்டுமொத்தத் தன்மையானது. வெளி 8:7-12 வசனங்களிலுள்ள, ஏழாம் முத்திரையின், முதல் நான்கு வாதைகளுடன் நெருங்கி ஒத்துப் போகிறதாக உள்ளது. தேவனுடைய கோபாக்கினையின் இந்த விவரிப்புகளை நாம் படிக்கும் போது தேவனுடைய கோபாக்கினையில் நாம் பங்கு பெறுவதற்கு அது ஏற்றதல்ல என்ற முடிவுக்கு நாம் வருவதைத் தவிர்க்க முடியாது. ஆகையால், தேவனுடைய கோபாக்கினையைத் தவிர்ப்பதற்காக தேவனுக்குக் கீழ்படிந்து நித்தியத்திற்கு நம்மை ஆயத்தம் செய்ய வேண்டும்.

வசனங்கள் 8-9 வேறொன்றையும் நமக்குப் போதிக்கிறது. அது, இந்த வாழ்க்கையில், தேவன் துன்மார்க்கர் மீது கொண்டு வருகின்ற தண்டனைகளின் பிரதான நோக்கங்களில் ஒன்று, அவர்கள் மனந்திரும்ப வேண்டுமென்பது ஆமோஸ் 4:6-11 வசனப்பகுதியில் தன்னுடைய கலக இருதயமுள்ள ஜனங்களின் மீது கொண்டு வந்த பல துன்பங்களைப் பட்டியலிடுகிறார். ஆனாலும், தேவன் :"ஆகிலும் நீங்கள் என்னிடத்தில் திரும்பாமற் போனீர்கள்" என்று ஐந்து முறை சொல்லுகிறார். இது தேவன் ஜனங்கள் தன்னிடத்தில் திரும்ப வேண்டுமென்பதற்காக அவர்களை துன்புறுத்தியுள்ளார் என்று காட்டுகிறது. (சங்கீதம் 107-யும் பார்க்கவும்) இஸ்ரவேல் மனந்திரும்ப மறுத்தது ஒரு துயரமான உண்மை. (ஆகாய் 2:17யும் பார்க்கவும்) இங்கே வெளி 9:20-21ல் ஏழாம் முத்திரையின் முதல் ஏழு வாதைகளுக்குள்ளாக்கப்பட்டவர்களிடம் அதே கீழ்படியாத தன்மையை நாம் பார்க்கிறோம். மீண்டும் அதே நிலையை 16:9ம் வசனத்திலும் காண்கிறோம். வெளி 15:4ல் உள்ளது போல, அவர்கள் மனந்திரும்பி, தேவனுக்கு மகிமை சேர்ப்பதற்குப் பதிலாக இந்த ஜனங்கள் தேவனைத் தூஷித்து பாவத்தைக் கூட்டி தங்களுக்கான தண்டனைக்குத் தங்களை ஒப்புக் கொடுத்தார்கள்.

இது போன்ற காரியம் வசனங்கள் 10-11ல் திரும்ப சொல்லப்பட்டுள்ளது. ஐந்தாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை மிருகத்தினுடைய சிங்காசனத்தின் மேல் ஊற்றினான்; அப்பொழுது அதின் இராஜ்ஜியம் இருளடைந்தது. அவர்கள் வருத்தத்தினாலே தங்கள் நாவுகளைக் கடித்துக் கொண்டு தங்கள் வருத்தங்களாலும், தங்கள் புண்களாலும் பரலோகத்தின் தேவனை தூஷித்தார்களேல்லாமல் தங்கள் கிரியைகளை விட்டு மனந்திரும்பவில்லை: இந்த இருளானது மோசேயின் காலத்தில் எகிப்தியர் மீது கொண்டுவரப்பட்ட ஒன்பதாவது வாதையை நமக்கு நினைவுப்படுத்துகிறது. (யாத் 10:20:29). ஆனால் வெளி 16: 10-11 சொல்லப்பட்டுள்ள

இருளோடு மிகுந்த வருத்தம் சேர்ந்து கொண்டதால் அவர்கள் தங்கள் நாவுகளைக் கடித்து கொள்ளும்படி செய்தது. இந்த வாதையானது மிருகத்தினுடைய சிங்காசனத்தின் மீது ஊற்றப்பட்டது. மிருகத்தின் ராஜ்ஜியம் என்பது அதை வணங்குகிறவர்களால் ஆனது. எப்படி சபையாகிய பரலோக ராஜ்யம் என்பது தேவனை உண்மையாக ஆராதிப்பவர்களைக் கொண்டதோ, அது போன்றது. நாம் ஒவ்வொருவரும், மரணத்திற்குள்ளாக்கும் பாவம் அல்லது நீதிக்குள்ளாக்கும் கீழ்ப்படிதல், இதில் எதற்கு நம்மை ஒப்புக் கொடுக்கப் போகிறோம் என்பதை தெரிந்தெடுக்க வேண்டும் (ரோம்.6.16-23). கர்த்தருடைய இராஜ்ஜியத்திலா அல்லது இருளின் ராஜ்ஜியத்திலா என்று தீர்மானிக்க வேண்டும். இந்த இரண்டிற்கும் இடைப்பட்டதும் இல்லை அல்லது மூன்றாவது வழியும் இல்லை. நாம் எடுக்க போகும் தீர்மானத்தின் படியாக நம்முடைய நித்தியம் இருக்கப் போகிற படியால் நாம் சரியான முடிவை எடுத்திருக்கிறோமா என்று உறுதி செய்து கொள்ள வேண்டும்.

JON MACON EZSR

## பெத்லகேம் ஒரு குறிப்பு

பெத்லகேம் என்கிற எபிரெய வார்த்தைக்கு "அப்பத்தின் வீடு" என்று பொருள். "லகேம்" என்கிற இப்பதத்தின் கடைசிப் பகுதி அசீரிய கடவுளைக் குறிக்கிறது என்ற ஒரு கருத்து நிலவுகிறது. ஆனால் இக்கடவுள் பாலஸ்தீனப் பகுதியில் இருந்ததற்கு ஆதாரமில்லை. பெத்லகேம் என்ற பெயரிலே இரு நகரங்கள் இருந்ததாகக் கூறப்படுகிறது.

a) தாவீதின் நகரமென்று புகழ் பெற்று அழைக்கப்பட்டது. எருசலேமிலிருந்து தெற்கில் 9 கி.மீ.யில் அமைந்திருந்தது. இதை பெத்லகேம் யூதா அல்லது பெத்லகேம் எப்பிராத்தா என்று அழைப்பார்கள். இதே பெயரைக் கொண்ட இன்னொரு பட்டணத்திலிருந்து வேறுபடுத்தவே இதை இப்படி அழைப்பார்கள். இதனுடைய முந்தியப் பெயர் எப்பிராத்தா என்பதாகும் (ஆதி 35:19). ராகேலுடைய கல்லறை இதன் அருகே இருந்தது. இயேசு இந்த ஊரிலே தான் பிறந்தார். இரண்டாம் நூற்றாண்டில் காட்ரியன் என்பவர்கள் இப்பட்டணத்தை துன்பப்படுத்தி யூதர்களை இப்பட்டணத்திலிருந்து துரத்தினார்கள்.

b) பெத்லகேம் என்கிற மற்றொரு பட்டணம் செபுலோனில் இருந்தது (யோசுவா 19:15) நாசரேத்திலிருந்து வடமேற்கில் 11 கி.மீயில் இப்பட்டணம் அமைந்திருக்கிறது. அநேகர் இப்சான் என்கிற நியாயாதிபதி இப்பட்டணத்திலிருந்து வந்திருக்கக் கூடும் என நம்புகிறார்கள் (நியா 12:8).

## அப்போஸ்தலர்களைப் போலவே வேதாகமத்தை (மாத்திரம்) அடிப்படையாகக் கொண்டவை

"நீ எழுந்து மகா நகரமாகிய நினிவேவுக்குப் போய், நான் உனக்குக் கற்பிக்கும் வார்த்தையை அதற்கு விரோதமாய் பிரசங்கி" என்று தேவன் யோனாவிடத்தில் கூறினார் (யோனா 3:2) தேவன் சொல்லுகிறபடி பிரசங்கிப்பதே தேவனைப் பிரியப்படுத்தும், துரதிஷ்டவசமாக நாமகரண (பிரிவுக்) கூட்டங்களில் இப்படிப்பட்ட பிரசங்கங்களை காண இயலுவதில்லை. அந்த பிரசங்கியார்கள் பெரும்பாலும் தேவனைப் பிரியப்படுத்தாமல் கூடிவருகிற கூட்டத்தையே பிரியப்படுத்த விரும்புகிறார்கள். முதல் நூற்-றாண்டுப் பிரசங்கியார்கள் தங்கள் பிரசங்கங்களில் தேவனையே பிரியப்படுத்துவதில் நோக்கமாயிருந்தனர். (அப்போஸ்தலர் 4:20 கலாத்தியர் 1:10 ஐக் காண்க) தங்களுடைய பிரசங்கத்திற்கு ஊற்றும் வல்லமையும் தேவனுடைய வசனத்தையே கிறிஸ்துவின் சபை பிரசங்கியார்கள் சார்ந்துள்ளனர். ஆத்துமாவை இரட்சிப்பதுதான் நமது அக்கறையேயன்றி, கேட்போரின் காதுகளுக்கு இனிமையை உண்டாக்குவதல்ல.

ரேஷாக் எனும் தற்போதைய கிறிஸ்துவின் சபை ஊழியர் (பிரசங்கியார்) தமது மனமாற்றத்திற்கு முன்பு பிரிவுக் (நாமகரகன) கூட்ட சபையினரால் அங்கீகாரம் பெற்று பிரசங்கித்துக் கொண்டிருந்தார். "நாம் ஆக்கினைத் தீர்ப்புக்குள்ளாக்கும் உபதேசங்களை பிரசங்கிக்கக் கூடியவர்களா?" என்ற தலைப்பின் கீழ் எழுதிய தமது கட்டுரைகளில் அவர், " நான் (மெதடிஸ்ட்) உபதேசங்களை புறக்கணித்து விட்டேன், அதாவது மெதடிஸ்ட் சபையை விட்டு நான் விலக வேண்டியதாயிற்று என்பது இதன் பொருள். நான் பிரசங்கிக்கும் படி எனக்கு அளிக்கப்பட்ட அங்கீகாரம் 'மெதடிஸ்ட் சபையின் ஒழுங்குபடிதான் நான் சுவிசேஷத்தை பிரசங்கிக்க வேண்டும்' என்ற நிபந்தனையின் அடிப்படையில் கொடுக்கப்பட்டது. ஆனால் இனியும் நான் அப்படிச் செய்ய இயலாது, ஏனெனில் மெதடிஸ்ட் சபை வேதவசனமாகிய எளிய சத்தியத்தை உள்ளபடி பிரசங்கிக்க அவர்களின் ஒழுங்கு செய்யப்பட்ட சட்டங்கள் அனுமதிப்பதில்லை. என்று அவர் எழுதுகிறார். இன்று அநேக நாமகரணக் கூட்ட பிரசங்கியார்கள் இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் உள்ளனர். அவர்கள், வேதாகமத்திற்கப்பால் தங்கள் போதனைகளுக்கு அடிப்படையாக அநேக சபை உபதேசக் கோட்பாடுகளுக்கு (அதாவது திருச்சபை கூட்டங்கள் எனும் பெயரில்) தங்களை ஒப்புக் கொடுத்துள்ளனர்.

பரிசுத்த வேதவசனங்களைக் குறித்து அநேக நாமகரண கூட்ட பிரசங்கியார்கள் கொண்டுள்ள எண்ணம் மேலும் அதிகமான ஆச்சரியத்தைக் கொடுக்கக் கூடியதாக இருக்கிறது. இன்றைய கிறிஸ்தவம் எனும் தலைப்பில்

வரும் பத்திரிக்கையில் (அக்டோபர் 13,1967 தேதியிடப்பட்டது) 7,441 புராட்டஸ்டண்ட் சபை பிரசங்கியார்கள் கலந்து கொண்டு அமெரிக்க ஐக்கிய நாடுகளில் விவிலியத்தை குறித்து நடத்தப்பட்ட தேர்தலின் முடிவு அறிவிக்கப்பட்டதாக கூறியிருந்தது. இந்தத் தேர்தலில், 89 சதவீதம் எபிஸ்கோபஸ் பாதிரியார்களும் 82 சதவீதம் மெதடிஸ்ட் பிரசங்கியார்களும் 81 சதவீதம் பிரிஸ்பட்டோரியன் பிரசங்கியார்களும்,57 சதவீதம் அமெரிக்கன் லூத்தரன் சபை பிரசங்கியார்களும், விவிலியத்தின் நேரடி மொழியாக்கத்தை புறக்கணிப்பதாக அதில் அறிவிக்கப்பட்டிருந்தது.அவர்களின் தேர்தலுக்கு கேட்கப்பட்ட கேள்வி அவர்கள் விவிலியத்தை (வேதாகமத்தை) தேவனுடைய வசனமாக ஏற்றுக் கொண்டு உண்மையில் விசுவாசிக்கிறார்களா என்பதுதான் . மேலும் 1974 டிசம்பர் 30 தேதியிட்ட "டைம்" எனும் பத்திரிக்கையில் " விவிலியம்விசுவாசிகளுக்குகிடைக்கும் ஆதாயம்" என்று தலைப்பிடப்பட்ட கட்டுரையில் விவிலியம் உள்ளபடி மொழியாக்கம் செய்யப்படுவதையும் விளக்கமளிப்பதையும் குறித்து நடந்த விவாதத்தில், நாமகரணக் கூட்ட முன்னோடிகளும், போதகமார்களும் அதே அவிசுவாசத்தை வெளியிட்டதாகக் கூறப்பட்டுள்ளது.

இப்பொழுது புதிய ஏற்பாட்டுச் சபை பிரசங்கியார்கள் விவிலியத்தைக் குறித்து கொண்டுள்ள எண்ணம் என்ன என்பதை ஆராய்வோமாக.

இவர்கள் தேவ வசனத்தை வாசிப்பவர்கள் I தீமோத்தேயு 4:14-ல் பவுல் தீமோத்தேயுவிற்கு கற்பித்த "....... உன் உபதேசத்தைக் குறித்தும் எச்சரிக்கையாயிரு..........." என்று கூறியிருக்கிறார். இந்த வசனத்தின் பொருளடக்கமும், 2. தீமோத்தேயு 2:15 ன் பொருளடக்கமும், வேதத்தை வாசிப்பவர்களுக்கு அதுவே பாடமாகும் என்பது தெளிவு. தேவனுக்கு முன்பாகத் தங்களை உத்தமனாக நிறுத்தும்படி வேத வசனங்களை பகுத்துப் போதிக்க வேண்டியவர்கள் என்பதை அவர்கள் அறிவார்கள். இப்படிச் செய்ய யதார்த்தமான வேத ஆய்வு தேவை! எபிரேயர் 5:12-14ல் வேத வசனங்களைக் கற்போர் அதைப் புரிந்து கொள்ளவும், மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க திராணியுள்ளவர்களாய் இருப்பதும் அவசியம் என நாம் அறிகிறோம்.. 2பேதுரு 3:15:16ல் அப்போஸ்தலனாகிய பேதுரு பவுல் அப்போஸ்தலனின் நிருபங்களை வாசித்து ஆய்வு செய்த காரியம் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. கிறிஸ்துவின் சபை பிரசங்கியார்கள் தேவனுடைய வசனத்தை கற்பதில் யதார்த்தத்தைக் காட்டி செயலாக்கம் தரும் வகையில் அவைகளை வெளிப்படுத்துவது அவசியமாகும்.

தங்கள் உபதேசங்களுக்கு ஆதாரமாக விவிலியத்திலிருந்து நிரூபிக்கிற வசனங்களைப் பயன்படுத்துதல் வேண்டும். பெந்தெகொஸ்தே நாளில், பேதுரு தாம் பிரசங்கித்த செய்தியில் யோவேல் 2:28 ஐ கோடிட்டுக் காட்டி, தமது பிரசங்கம் மதுபான வெறியில் வந்ததல்ல, தேவனிடத்திலிருந்து வந்தது எனக் காட்டுகிறார். சங்கீதம் 16:8 ஐ பயன்படுத்தி, கிறிஸ்துவின் வருகையையும், அவரது உயிர்த்தெழுதலையும் தாவீது எதிர்பார்த்திருந்ததாகக் கூறுகிறார். 2

சாமுவேல் 7:12யும் சங்கீதம் 132:11யும் பயன்படுத்தி, இயேசு இப்பொழுது பரலோகத்தில் தமது சிங்காசனத்தில் வீற்றிருந்து ஆளுகை செய்வதை நிரூபிக்கிறார். ஸ்தேவான் அப்போஸ்தலர் 7-ம் அதிகாரத்தைப் பயன்படுத்தி, யூத மதப் போதகர்கள் கடின இருதயமும் வணங்கா கழுத்துள்ளவர்களுமாகி சத்தியத்தை புறம்பாக்குவார்கள் என்பதற்கு ஆதாரமாக பழைய ஏற்பாட்டு வசனங்களைப் பயன்படுத்துகிறார். பிலிப்பு எத்தியோப்பிய மந்திரிக்கு கிறிஸ்துவைக் குறித்தும், இரட்சிப்பின் திட்டத்தைக் குறித்தும் போதிக்கும் போது, அப்போஸ்தலர் 8:35 ல் கூறப்படுவதாவது "........... இந்த வேதவாக்கியத்தை (ஏசாயா 53) முன்னிட்டு இயேசுவைக் குறித்து அவனுக்குப் பிரசங்கித்தான்" அப்போஸ்தலர் 18:28 -ல் அப்பொல்லோவின் பிரசங்கத்தைக் குறித்து கூறப்படுகிறது. " அவன் அங்கே வந்தபின்பு வெளியரங்கமாக யூதர்களுடனே பலமாய்த் தர்க்கம் பண்ணி இயேசுவே கிறிஸ்து என்று வேத வாக்கியங்களைக் கொண்டு, திருஷ்டாந்தப்படுத்தின படியால், கிருபையினாலே விசுவாசிகளான-வர்களுக்கு மிகவும் உதவியாயிருந்தான்" பவுலையும் பர்னபாவையும் குறித்து...... வேறே அநேகரோடுங்கூடக் கர்த்தருடைய வசனத்தை உபதேசித்துப் பிரசங்-கித்துக் கொண்டிருந்தார்கள்" என்று அப் 15:35ல் கூறப்படுகிறது. அவர்க-ளெல்லாரும் வேத வசனங்கள் மாத்திரமே போதுமானவை என விசுவாசித்தனர். அவர்களுக்கு வேறு எந்த உபதேசக் கோட்பாட்டுப் புத்தகமும் தேவைப்பட்டிருக்கவில்லை. மாறாக மனுஷர்களின் கோட்பாடுகளையும், உபதேசங்-களையும் அவர்கள் கண்டித்தார்கள் (கலாத்தியர் 1:6-9 1 தீமோத்தேயு 1: 6-7, 4: 1-3, 2. தீமோத்தேயு 2:16-18,3:5-9: தீத்து 1:9-11) 2. தீமோத்தேயு 3:16-17 ல் பவுல் (பரிசுத்த ஆவியின் ஏவுதலினால்) புதிய ஏற்பாட்டு உபதேசம் வசனங்களையே ஆதாரமாகக் கொண்டவை என்பதையும் " எந்த நற்கிரியையும் "செய்யவும், நம்மை பூரணப்படுத்தவும் போதுமானவைகளாயிருக்கின்றன. என்கிற உண்மையை மிகத் தெளிவாகக் காட்டுகிறார். நாம்....... எழுதப்பட்டதற்கு மிஞ்சி எண்ணக்கூடாது" எனும் அளவிற்குக் கூட நாம் கற்றுக் கொள்ள வேண்டிய அவசியத்தைப் போதிக்கிறது. (I கொரிந்தியர் 4:6) கிறிஸ்து கொடுத்-திருப்பதைக் காட்டிலும மேலான உபதேசம் தங்களுக்குத் தேவைஎன உணருவோர் தேவனையுடையவர்களல்ல என்றும் கூறப்பட்டுள்ளது. "கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல...." (2யோவான் -9) அப்போஸ்தலர்களை சகல சத்தியத்-திற்குள்ளும் வழி நடத்துவதாக கிறிஸ்து கூறினார் (யோவான்16:13) 2பேதுரு 1:3 ல் அப்போஸ்தலன் குறிப்பிடுகையில்" .... ஜீவனுக்கும், தேவ பக்திக்கும் வேண்டிய யாவற்றையும் அவருடைய திவ்விய வல்லமை நமக்குத் தந்தருளி......" என்று கூறுகிறார் I யோவான் 4:6ல் அப்போஸ்தலன் " நாங்கள் தேவனால் உண்டானவர்கள்: தேவனை அறிந்தவன் எங்களுக்கு செவி கொடுக்கிறான்: தேவனால் உண்டாயிராதவன் எங்களுக்குச் செவி கொடுக்கிறதில்லை. இதினாலே சத்திய ஆவி இன்னதென்றும், வஞ்சக ஆவி இன்னதென்றும் அறிந்திருக்கிறோம்" என்று கூறுகிறார். எந்த ஒரு தனி நபரும் அல்லது குழுவும்

எழுதப்பட்டு உள்ள வேதவசனங்கள் தங்களுக்குப் போதுமானதாகக் கருதாமலும்...." பரிசுத்தவான்களுக்கு ஒரு முறை ஒப்புக் கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக தைரியமாய் போராடாதவர்களும்....." (யூதா 3) தேவனுடைய சபையை அறிமுகப்படுத்தும் நபர்களல்ல.

இன்று நாமகரணக் கூட்ட பிரசங்கங்களிலிருந்து, புதிய ஏற்பாடுச் சபையின் பிரசங்கங்கள் எப்படி, எவ்வளவாய் வித்தியாசப்பட்ட கருத்துடையவர்களாயிருக்கிறார்கள்! இன்று கிறிஸ்துவின் சபை பிரசங்கியார்கள் இந்த புதிய ஏற்பாட்டு சபையின் உபதேசங்களையே மாதிரியாக எடுத்துக் கொண்டு பிரசங்கிக்கின்றனர். அவர்களின் பிரசங்க வல்லமை, வசனங்களின் வெளிப்பாடுகளே.

அநேக பிரசங்கியார்கள் தங்களின் பிரசங்கம் வல்லமையுள்ளதாய் அமைய வார்த்தை ஜாலங்களை சார்ந்துள்ளனர். பிரசங்கியார்களுக்கு பயிற்சி அளிக்கப்படும். அநேக பயிலகங்களில் தத்துவம் தேவைப்படுகிற நிலை. சில பிரசங்கியார்கள் முன் உள்ள கூட்டத்தாரை மகிழ்விக்க, நாடகப்பாணியை கையாளுகின்றனர். வேறு சிலர் தங்கள் முன் உள்ள கூட்டத்தை கவர மனவெழுச்சியைத் தூண்டும் முறையைப் பின்பற்றி கூடிவரும் கூட்டத்தாரை எழுப்பிவிடுவதன் மூலம் தாங்கள் வல்லமையாக பிரசங்கித்து விட்டதாக உணரு-கின்றனர்.

ஆனால் புதிய ஏற்பாட்டு பிரசங்கியார்கள் சுவிசேஷத்தை எளிமையாய் பிரசங்கிப்பதையே தங்கள் பிரசங்கத்தின் வல்லமையாக உணருகின்றனர்!... கிறிஸ்து என்னை.... சுவிசேஷத்தை பிரசங்கிக்கவே அனுப்பினார். கிறிஸ்துவின் சிலுவை வீணாய் போகாதபடிக்கு , சாதுரிய ஞானமில்லாமல் பிரசங்கிக்கவே அனுப்பினார். சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்கு பைத்தியமாயிருக்கிறது. இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவ-பெலனாயிருக்கிறது", (I கொரித்தியர் 1:17:18) சுவிசேவித்தின் வல்லமையைக் (பெலனைக்) குறித்துப் பேசுகிற ரோமர் 1:15-17 யும் ஒருவர் வாசித்துப் பார்க்க வேண்டும். பவுல் "........ நான் உங்களிடத்தில் வந்தபோது தேவனைப் பற்றிய சாட்சியைச் சிறந்த வசனிப்போடாவது, ஞானத் தோடாவது அறிவிக்கிறவனாக வரவில்லை" என்று எழுதினார். இருந்தும் அவர் இழந்த போன ஆத்துமாக்களை கிறிஸ்துவுக்கு ஆதாயம் பண்ணுகிறதிலும் பல பலமான பிராந்திய சபைகளை எடுத்துக் கட்டுவதிலும் சிறந்த வெற்றி கண்டார். அவர் தேவனுடைய வல்லமையை அவருடைய வசனத்தின் மூலம் சார்ந்திருந்தமையால் வெற்றி கொள்ள முடிந்தது. அவைகளை நாங்கள் மனுஷ ஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தை-களாலே பேசி, ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப்-படுத்திக் காட்டுகிறோம்." I கொரிந்தியர் 2:13)

அப்போஸ்தலரின் பிரசங்கம் " தேவனுடைய ஆலோசனைகளில் ஒன்றையும் மறைத்து வைக்காமல்" மனமுவந்து ஏற்றுக் கொண்டதில் அமைந்-

திருந்தது" (அப் 20:27) அவர்களின் பிரசங்கம் தேவனுடைய முழு ஆலோசனைகளையும் சார்ந்திருந்தமையால் வசனத்தில் எந்த குறையையும் அவர்கள் காணவில்லை என்பது இதன் பொருள் தவறானதைப் போதிப்பது போலவே, சுவிசேஷத்தின் பகுதி உண்மையை போதிப்பதும் இரட்சிப்புக்குரிய பெலனை (வல்லமையை) பெற ஏதுவாக்காது.

அவர்களின் பிரசங்கம் வல்லமையாயிருக்கக் காரணம் அவர்கள் போதித்த மக்களுக்கு நன்மையானவையே அறிவிக்கும் விருப்பம் அவர்களுக்கு இருந்ததுதான். (அப் 20:20) அதாவது சபையார்கள் அல்லது ஆத்துமாவை இழந்தவர்களின் தேவையை அறிந்து அவர்கள் பிரசங்கித்தார்கள். இன்றைய பிரசங்கியார்களும் அதே தைரியம் கொண்டு பிரசங்கிப்பது அவசியமாகும்! இன்று அநேகர் 2 தீமோத்தேயு 4:3-4ல் பவுல் குறிப்பிடும் நபர்களுக்கு ஒப்பாகவே இருக்கின்றனர். இன்று தேவபக்தியை அறிவித்தும், அதிலுள்ள வல்லமையை மறுப்பது எவ்வளவு வேதனையானது (2த்மோத் தேயு 3:5)


**முடிவுரை:**

இப்படிப்பட்ட பிரசங்கங்களின் முடிவும் வேதத்தில் கொடுக்கப்பட்டுள்ளது."உன்னைக் குறித்தும் உபதேசத்தைக் குறித்தும் எச்சரிக்கையாயிரு, இவைகளில் நிலை கொண்டிரு இப்படிச் செய்வாயானால் உன்னையும், உன் உபதேசத்தைக் கேட்பவர்களையும் இரட்சித்துக் கொள்ளுவாய் (1 தீமோத்தேயு 4:16) புதிய ஏற்பாட்டுப் பிரசங்கியார்களின் மாதிரியைப் பின்பற்றிப் பிரசங்கிக்க, தேவன் தாமே நமக்கு எப்பொழுதும் உதவி செய்வாராக!

தமிழில்: **E.A. ஆறுமுகம்**

# ரோமப் பேரரசர்கள்

| ரோம அரசர்கள் | காலம் | |
|---|---|---|
| 1. அகஸ்து ராயன் | 27 கி.மு. - 14 கி.பி. | ஜீலியன் (காவூஸ்) வம்சவழி |
| 2. திபேரியுராயன் | 14 - 37 கி.பி. | |
| 3. காலிகுலா | 37-41 | |
| 4. கிலவுதியு ராயன் | 41-54 | |
| 5. நியூரோ | 54-68 | |
| 6. கால்பா | 68-69 | பிலேவியன் வம்சவழி |
| 7. ஓட்டோ | 69 | |
| 8. விட்டாலியஸ் | 69 | |
| 9. வெஸ்பாசியன் | 69-79 | |
| 10. தீத்துராயன் | 79-81 | |
| 11. டொமீசியன் | 81-96 | |



# HEAR THE VOICE OF TRUTH

## ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 8.45-9.00p.m.<br>9.00-9.15p.m. | Box.3815<br>New Delhi-110049 | Sunny David |
| TELUGU | Sun, Mon<br>Tue, Thu | 2.00-2.15p.m. | Box.80<br>Kakinada-533001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45-7.00p.m.<br>5.45-6.00p.m.<br>5.30-5.45p.m. | Box.8405<br>Bangalore-560084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45-4.00p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum-695034 | P.K. Varghese |



***Please write to these address for Bible Correspondence Courses, Magazines and other Christian Literatures***

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST

REGISTERED NEWS PAPER

RNI No. 47661 / 87 - NEW DELHI

# அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு

## ஓர் இனிய செய்தி.

ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு

செய்யப்பட்ட, அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில்

நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம்.

இது 15 பாடங்களைக் கொண்ட

## ஓர் இலவசப் பயிற்சி.

இப்பயிற்சியை வெற்றிகரமாக

முடிப்பவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

*இயக்குநர்,*

**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி,**

த.பெ.எண் - 27, காங்கேயம் - 638 701. தமிழ்நாடு, இந்தியா.

Published by **Church of Christ, Kangayam.**

Printed at Konar Printers, Madurai - 625 012. Editor : **S.RAJANAYAGAM,**